வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 05.09.2022 திங்கட்கிழமை | இதழ் : 270 | பக்கங்கள் : 16

# புலம்பெயர் தமிழ் அமைப்பினரை ஜெனிவாவுக்கான குழு சந்திக்கும்!



## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ

கொழும்பு, செப். 05

புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளை அரசாங்க பிரதிநிதிகள் ஐ. நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரின்போது சந்தித்துப் பேசுவர். அத்துடன், தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள புலம்பெயர்ந்தோருக்கான அலுவலகம் மூலம்பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு என்ன செய்யலாம் என்பது தொடர்பிலும்அவர்களுடன் பேசப்படும்.

- இவ்வாறு நீதி அமைச்சரும் ஜெனிவாவுக்கான அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவில் இருப்பவருமான விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது அர 15

# ராஜபக்ஷக்களின் எழுச்சி விரைவில்!

## மகிந்த ராஜபக்ஷ உறுதி

கொழும்பு, செப். 05

“ராஜபக்ஷக்களை கீழ்த்தரமாக விமர்சிக்க வேண்டாம். ராஜபக்ஷக்களின் எழுச்சி விரைவில் நடக்கும். உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் சூழ்ச்சிகளால் ராஜபக்ஷக்களின் அரசியல் பயணத் 15



# தனிசந்திப்பில் பங்காளி கட்சிகள் தமிழ் அரசுக் கட்சிக்குள் குழப்பம்!

## தலைமை தொடர்பிலும் மாவையை நேரடியாக சாடினார் சிறீதரன் எம்.பி.!

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 05

ரெலோ, புளொட் கட்சிகள் மற்றும் சுமந்திரன் எம். பியின் தனி செயல்பாடுகள் தொடர்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமைகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் வலியுறுத்தியுள்ளார். 15

# ஐ. நா. மனித உரிமை கூட்டம் அரசாங்க குழு இன்று பயணம்!

கொழும்பு, செப். 05

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையிலான குழு இன்று திங்கட்கிழமை ஜெனிவா புறப்படுகின்றது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகி ஒக்ரோபர் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த அமர்வில், பொறுப்புக் கூறல் தொடர்பில் சர்வதேச தரப்பினர் அடங்கிய பொறிமுறை நிராகரிக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் கூறினார். அத்துடன், உள்ளக பொறிமுறை 15

# தொலைதொடர்பு கட்டணங்கள் இன்று உயரும்!

கொழும்பு, செப். 05

இன்று திங்கட்கிழமை முதல் அனைத்து வகையான தொலைத்தொடர்பு கட்டணங்கள் மற்றும் இணைய வசதி கட்டணங்களும் 20 வீதத்தால் அதிகரிக்கின்றன. இதுபோன்று 15

# சர்வதேச நீதிமன்ற விசாரணை இன்றேல் மேற்கு நாடுகளும் இந்தியாவுமே காரணம்!

## கஜேந்திரகுமார் எம். பி.

கொழும்பு, செப். 05

ஐ. நா பாதுகாப்பு சபையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற (ஐ. சி. சி.) விசாரணையை கொண்டுவராவிடின் மேற்கத்தேய நாடுகளும் இந்தியாவுமே காரணமாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம் 15



# சுகாதார துறையில் கொள்கை மாற்றம்

## ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

கொழும்பு, செப். 05

சுகாதாரத் துறையில் மேற்கொள்ள வேண்டிய உடனடி கொள்கை மாற்றத்தின் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடன் 15

# நாடு திரும்பியுள்ள கோட்டாபய வழக்குகளை சந்திக்க நேரலாம்!

## கடத்தல் வழக்கில் அழைப்பாணை விடுக்க வாய்ப்பு

கொழும்பு, செப். 05

பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து ஏற்பட்ட போராட்டங்களால் நாட்டை விட்டு வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ 7 வாரங்கள் கழித்து நாடு திரும்பியுள்ளார். இந்நிலையில் அவர், சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ளக் கூடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி பதவியிலிருந்தபோது அரசமைப்பு வழங்கிய விடுப்பாட்டு உரிமையை அவர் தற்போது இழந்துள்ளார். இதனால், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது. 15

## நாடு திரும்பிய கோட்டாபயவை

# வரவேற்க செல்லவிடாமல் செய்த மனைவியை தாக்கினார் கணவர்!

கொழும்பு, செப். 05

நாட்டுக்கு மீண்டும் திரும்பிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வரவேற்க செல்ல முடியாதவாறு செய்த மனைவியை பாத்திரம் ஒன்றால் கணவர் தாக்கினார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் கம்பஹா மாவட்டத்தின் தொலைவில் உள்ள கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய 15

# ரூ. 100 எகிறியது கொத்து ரொட்டி!

யாழ்ப்பாணம், செப். 05

கொத்து ரொட்டியின் ஒன்றின் விலை 100 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை சிற்றுண்டிசாலை உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பு 15

## இப்படியும் நடக்கிறது...!

நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், கடந்த கோட்டாபய அரசாங்கம் கடைப்பிடித்த ஒரு முக்கிய விவகாரம் அந்த நெருக்கடியிலிருந்து வெளியே வருவதற்கு தடையாக இருந்தது என்று இப்போது உணரப்பட்டு வருகின்றதாம்.

சிங்கள மக்களின் வாக்குகளைக் கவருவதற்காக சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக- கோட்டாபய அரசாங்கம் நடந்துகொண்ட விதம் இரண்டு முக்கிய விடயங்களாக தற்போது ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

முதலாவது,

புலம்பெயர் தமிழர்கள் அனைவரையும் புலிகள் போல நடத்த முற்பட்டது. அதனால் வழக்கமாக இந்த நாட்டுக்கு டொலர், யூரோக்களை அனுப்பும் புலம்பெயர் தமிழர்கள் அதனை வேறு வழிகளில் அனுப்பத் தொடங்கியமை உத்தியோகபூர்வமாக நாட்டுக்கு வரும் டொலர் வருமானத்தை பாதித்தது.

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் புலம்பெயர் தமிழர்களின் வருமானத்திலேயே வாழ்கின்றனர். அவர்கள் சராசரியாக ஐநூறு டொலர்களை மாதாமாதம் பெற்றாலும் ஐம்பது மில்லியன் டொலர்கள் நாட்டுக்கு அந்நியச் செலாவணியாக கிடைக்கின்றன.

அது முற்றிலுமாக நின்று போனது.

அடுத்தது, முஸ்லிம் மக்களைப் பகைத்துக்கொண்டது. தேர்தல் காலத்தில் கடும் சிங்கள இனவாதத்தைப் பரப்பி ஆட்சிக்கு வந்ததால், அதனைத் தக்க வைப்பதற்காக முஸ்லிம்களுக்கு எதிரான நிலைப்பாட்டை கையில் எடுத்ததால் அதனைத் தொடரவேண்டிய கட்டாயம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

இதனால் தமது அமைச்சரவையில் முஸ்லிம் கட்சிகளை புறக்கணித்ததோடு கொரோனா காலத்தில் கொரோனாவால் இறக்கின்ற முஸ்லிம்களின் ஜனாசாக்களை வலுகட்டாயமாக- அவர்களின் சமய முறைகளுக்கு விரோதமாக எரிக்க உத்தரவிட்டதும், அதனால் நாட்டிலுள்ள முஸ்லிம்களின் எதிர்ப்பை மாத்திரமன்றி, ஒட்டுமொத்த முஸ்லிம் நாடுகளின் வெறுப்பையும் நமது நாடு சம்பாதிக்க நேர்ந்தது.

இலங்கைக்கு பொருளாதார நெருக்கடி காலத்தில் பலர் உதவ முன்வந்தாலும் அவர்களின் அந்த உதவிக்குப் பின்னால் ஒரு நோக்கம் இருந்ததை மறுப்பதற்கில்லை. யார் உதவ முன்வந்தாலும் தமது நலன்களையும் அதனோடு இணைத்தே அவர்கள் உதவிக்கு வந்தார்கள். ஆனால், அரபுநாடுகள் உதவ முன்வந்திருந்தால் அவர்களுக்கு அப்படியொரு நோக்கம் இருந்திருக்காது.

எனவே, அரபு நாடுகளை இலக்கு வைத்து அவர்களை முன்னரைப்போல நட்புடன் நெருங்குவதற்கு தற்போதைய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முடிவெடுத்திருக்கின்றது என்கின்றன அரசாங்கத்துக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

புதிய அமைச்சரவை மாற்றத்தின்போது முஸ்லிம் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு அவர்கள் ஊடாக மீண்டும் அரபு நாடுகளுடன் நெருக்கமான உறவை வளர்த்தெடுப்பது இந்த ரணில் அரசாங்கத்தின் முக்கிய பணியாக இருக்கும் என்கின்றன அரசாங்கத்துக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வீடு தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் குறித்து ஹக்கீமுடன் முரண்பட்டிருந்தமை ஞாபகமிருக்கலாம்.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய, ஜனாதிபதி மாளிகையிலிருந்து தப்பிச் சென்ற பின்னர் சபாநாயகர் அவசரமாக அனைத்துக்கட்சி கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தார். அந்தக் கூட்டத்தில் அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலகவேண்டும் என்று அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதிலும் அதனை ஏற்றுக்கொள்ள ரணில் விக்கிரமசிங்க மறுப்புத் தெரிவித்திருந்தார்.

இவர் இவ்வாறு மறுப்புத் தெரிவித்ததை, கூட்ட இடத்திலிருந்தே ஹக்கீம் தனது தனிப்பட்ட ருவிட்டர் பக்கத்தில் ருவீட் செய்ய, அதனை சில தொலைக்காட்சி ஊடகங்கள் நேரலையாக ஒளிபரப்ப, சில நிமிடங்களிலேயே ஆர்ப்பாட்டக்காரர்கள் ரணிலின் வீட்டை முற்றுகையிட்டனர்.

இதனை பின்னர் ஒருதடவை சுட்டிக்காட்டிய ரணில், ஹக்கீமின் ருவீட் காரணமாகவே தனது வீடு தீக்கிரையாக்கப்பட்டதாக குற்றம் சாட்டினார்.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பாக நடந்த பேச்சுகளின் போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இதற்காக வருத்தம் தெரிவித்ததாகவும்கூட பின்னர் சில செய்திகள் வெளிவந்திருந்தன.

அதுமாத்திரமன்றி, தனக்கு வேண்டப்படாதவர்கள் கிழக்கு மாகாண ஆளுநராக வந்துவிடக்கூடாது என்பதிலும் ஹக்கீம், ரணிலிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார் எனவும் இதனால் அவருடன் சில விடயங்களை அனுசரித்துக்கொண்டு செல்லவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிவெடுத்திருக்கிறார் என்றும் அவருக்கு நெருக்கமான அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தங்கள் தேவைகளுக்காக அவர்கள் பாவித்தாலும், அதனை தமக்கு எப்படி சாதகமானதாக மாற்றமுடியும் என்பதை தெரிந்து வைத்திருக்கும் முஸ்லிம் தலைவர்கள் சரியான காய் நகர்த்தல்களை செய்வார்கள் என்பது தெரிந்ததே.!

- ஊர்க்குருவி

# இன்னும் ஆறு மாதங்களுக்கே ரணிலின் அரசாங்கம் இருக்கும்!

### ஆளும் தரப்பே கவிழ்க்கும் என்கிறார் வாசுதேவ



கொழும்பு, செப். 05

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இன்னும் ஆறு மாத காலத்துக்கு மாத்திரமே பதவியில் இருக்கும். ஆளும் தரப்பின் ஒருசிலர் தமது குறுகிய தேவைக்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வர முயற்சிக்கிறார்கள்”, என்று இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் காரியாலயத்தில் இடம்பெற்ற அரசியல் கட்சி தலைவர்களுடனான சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பொருளாதார நெருக்கடிக்கான கொள்கை திட்டத்தை ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ இதுவரை முன்வைக்கவில்லை. சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை அடிப்படையில் 2.9 பில்லியன் நிதியை வழங்க சர்வதேச நிதியம் இணக்கம் வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை அமுல்படுத்தும் போது நடுத்தர மக்கள் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமையவே மின்சாரம் மற்றும் நீர் விநியோக கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் மேலும் சில சேவைகளின் கட்டணம் அதிகரிக்கப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இன்னும் 6 மாத காலத்திற்கு மாத்திரம் பதவியில் இருக்கும். மக்களின் ஆதரவு இல்லாமல் எந்தப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முடியாது. தமக்கான அரசாங்கத்தை தெரிவு செய்துகொள்ள நாட்டு மக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

ஆளும் தரப்பின் ஒருசிலர் தமத குறுகிய தேவைகளுக்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வர முயற்சிக்கிறார்கள். தவறான ஆலோசனைகளே அவரின் நிர்வாகத்தை முழுமையாக பலவீனப்படுத்தியது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு மக்களாணை உண்டு என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் குறிப்பிடுவது நகைப்புக்குரியது. மக்களாணை உள்ளதாகக் குறிப்பிட்டுக்கொள்ளும் தரப்பினர் உள்ளூராட்சிமன்ற தேர்தலை பிற்போட அழுத்தம் பிரயோகிக்கிறார்கள்- என்றார். (ஐ)

# ஜனாதிபதி இல்லத்தில் களவுபோன புத்தகங்கள் என்னிடமே உள்ளன!

### செயலகத்துக்கு வந்த தொலைபேசி அழைப்பு

கொழும்பு, செப். 05

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தில் இருந்து திருடப்பட்ட புத்தர் சிலை மற்றும் புத்தகங்கள் தன்னிடம் இருக்கின்றன என்று ஜனாதிபதி செயலகத்தின் பொது இலக்கத்துக்கு வந்த தொலைபேசி அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருடப்பட்ட புத்தர் சிலை மற்றும் புத்தகங்களை தன்னிடம் வைத்திருக்க பயமாக இருக்கிறது என்றும் அதனை உரிமையாளரிடம் மீள ஒப்படைக்க வேண்டும் எனவும் அழைப்பெடுத்த நபர் தெரிவித்துள்ளார்.

புத்தர் சிலை மற்றும் புத்தகங்கள் பத்திரமாக இருக்கின்றன என்று தொலைபேசியில் தெரிவித்த நபர், ஜனாதிபதியின் செயலாளரிடம் பேச விரும்புகிறார் என்று கூறியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அழைப்பின் மூலம் தகவலைப் பெற்றுக்கொண்ட அதிகாரி ஜனாதிபதியின் செயலாளரிடம் விடயத்தை தெரிவித்ததையடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் மேலதிக விசாரணைகளை செயலாளர் ஒப்படைத்துள்ளார். (ஐ)

# பாடப் புத்தகங்களை அச்சிட 1,648 கோடி ரூபாய் ஒதுக்கீடு!

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப். 05

எதிர்வரும் 2023ஆம் கல்வி ஆண்டுக்கான பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கு சுமார் 1,648 கோடி ரூபாயை செலவிட எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய புதிய கல்வி ஆண்டுக்குத் தேவையான பாடசாலைப் பாடப் புத்தகங்களில் 45 சதவீதமானது அரச அச்சக கூட்டுத்தாபனத்தினாலும் ஏனைய 55 வீதம் தனியார் அச்சகத்தினாலும் அச்சிடப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கான காகிதம் இந்திய கடன் உதவியின் கீழ் இறக்குமதி செய்யப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# சிறுப்பிட்டியில் விபத்து; ஒரே குடும்பத்தவர் காயம்!

யாழ்ப்பாணம், செப். 05

சிறுப்பிட்டியில் இடம்பெற்ற விபத்தில் கணவன், மனைவி மற்றும் அவர்களின் பிள்ளை என மூவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 5 மணியளவில் காரும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் இந்த விபத்தில் இடம்பெற்றது.

இதில், 8 வயதுச் சிறுவன் கால் முறிந்த நிலையில் 48 வயதுடைய தந்தையும் 42 வயதுடைய தாயும் படுகாயமடைந்துள்ளனர்.

கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த மூவரும் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காரின் சாரதி கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## முட்கிளுவை முள் குத்தியதால் அனலைதீவில் ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணம், செப். 05

முட்கிளுவை தடியின் முள் குத்தியதில் ஒருவர் உயிரிழந்தார்.

அனலைதீவு 7ஆம் வட்டாரத்தை சேர்ந்த குமாரசாமி தம்பிராசா (வயது -70) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 31ஆம் திகதி அவருக்கு காலில் முள் குத்தியது. காலில் கொதி வலி இருப்பதாக அனலைதீவு மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்றுள்ளார். பின்னர்,அங்கிருந்து ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
05.09.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஆவணி 21

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கோட்டாபய ராஜபக்ஷ?

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியமையைத் தொடர்ந்து - கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைத் தீவின் அரசியலில் மீண்டும் பேசுபொருளாகியிருக்கின்றார். தென்னிலங்கையின் - சிங்கள மக்களின் கிளர்ச்சியின் மூலம் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாடுகளில் தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாத நிலையில் நாடு திரும்பியிருக்கின்றார். இலங்கையின் அரசியல் வரலாற்றில் கோட்டாபய ராஜபக்ஷவே மக்கள் எதிர்ப்பின் ஊடாக அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்ட முதல் ஜனாதிபதியாவார்.

கோட்டாபய ராஜபக்ஷ சிங்கள தேசியவாதத்தின் புதிய எழுச்சியின் குறியீடாக நோக்கப்பட்ட ஒருவர். கடந்த தேர்தலில் அனைத்து தென்னிலங்கை தேசியவாத குழுக்களும் கோட்டாபயவின் பின்னால் முழு நம்பிக்கையுடன் அணிதிரண்டனர். அதேவேளை ராஜபக்ஷ குடும்பத்தின் எதிர்கால அரசியல் திட்டங்களுக்கான அத்திபாராமாக அவர் நோக்கப்பட்டார். ஆனால், பொருளாதார நெருக்கடியும் அதனைக் கையாளும் திறனற்ற நிலையும் மிகவும் விரைவாகவே கோட்டாபய ராஜபக்ஷவை சிங்கள மக்கள் மத்தியில் வெறுப்புக்குரியவராக மாற்றியது. தேசியவாதம் தொடர்பில் எவ்வாறான ஆடம்பரமான சொற்களைப் பயன்படுத்தினாலும்கூட இறுதியில் பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பதே உண்மையாகியிருக்கின்றது. பசிக்கு முன்னால் எந்தவோர் அரசியல் வாதமும் தாக்குப்பிடிக்க முடியாதென்பது கோட்டாபய விடயத்தில் நிரூபணமாகியிருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷவின் வெளியேற்றம் இலங்கைத் தீவில் எவருமே எதிர்பாராத விடயங்களை அரங்கேற்றியிருக்கின்றன. சிங்கள இளைஞர், யுவதிகள் புதியவகையானதோர் எழுச்சியை அறிமுகப்படுத்தியிருக்கின்றனர். இந்த முறைமை எதிர்காலத்திலும் பிரயோகிக்கப்படமாட்டாதென்று கூறிவிட முடியாது. அதேவேளை, இனி அரசியல் வாழ்வில்லையென்று கணிக்கப்பட்ட - ஒரு தேசியபட்டியல் ஆசனத்தின் மூலம் பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் எட்டாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகி இருக்கின்றார்.

2019 தேர்தல் பிரசார காலத்தில், கோட்டாபய ராஜபக்ஷவை ஒரு "டேமினேட்டர்" என்று அவரின் சகோதரர்களில் ஒருவரான பஸில் ராஜபக்ஷ வர்ணித்திருந்தார். அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவை வண்ணத்துப் பூச்சியென்று ராஜபக்ஷக்கள் பரிகசித்தனர். ஆனால், இப்போதோ நடந்திருப்பது வேறு. டேமினேட்டர் அதன் பாதுகாப்புக்கு வண்ணத்துப்பூச்சியை நம்பியிருக்கின்றது.

கோட்டபாயவின் வீழ்ச்சி அவரின் குடும்பத்தினருக்கு மட்டுமல்ல தென்னிலங்கை அரசியலில் அதிகாரத்தை கைப்பற்றும் எண்ணம் கொண்டிருப்பவர்கள் அனைவருக்குமே ஒரு தெளிவான செய்தியை சொல்லியிருக்கின்றது. அதாவது, வெறும் இனவெறுப்பு சிங்கள - பௌத்த தேசியவாதத்தை மட்டும் கருவியாகக் கொண்டு அதிக காலம் அரியணையை அலங்கரிக்க முடியாது. மக்களைக் கவருவதற்கு சிறந்த திட்டங்கள் தேவை. இனவெறுப்பு, மத வெறுப்பு இவற்றின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தாலும்கூட அதனை அதிக காலத்துக்குத் தக்க வைக்க முடியாது.

ஆனாலும், சிங்கள தேசியவாத சக்திகள் ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியிலிருந்து எதையாவது கற்றுக் கொண்டிருக்கின்றனரா? இதற்கான பதில் சிங்கள ஆளும் வர்க்கத்தின் எதிர்கால செயல்பாடுகளை உற்று நோக்குவதன் மூலம் மட்டுமே அறிய முடியும். ஆனால், இதுவரையில் அதற்கான சமிக்ஞைகளைக் காண முடியவில்லை.

இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றில் தன்னையொரு சிங்கள - பௌத்த தலைவன் என்று பகிரங்கமாக அறிவித்தவர் கோட்டாபய ராஜபக்ஷ ஒருவர்தான். 16ஆம் லூயி மன்னன் பாணியில், "நான்தான் நீங்கள் தேடிய தலைவன்", என்று, சிங்கள மக்களுக்கு முன்னால் பிரகடனம் செய்தார். ஆனாலும் அவரின் ஆவேசமான வார்த்தைகள் அவரை இறுதியில் காப்பாற்றவில்லை.

# நள்ளிரவில் கோட்டாபய நாட்டினுள் மீள்வருகை!

அலசுவது இராஜதந்திரி

ஐம்பது நாட்களுக்குப் பின்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீளவும் இலங்கை திரும்பியுள்ளார். இலங்கையின் ஆட்சியாளர்களில் மக்களின் எதிர்ப்பலையை தாங்க முடியாது நாட்டை விட்டு வெளியேறிய முதலாவது ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ விளங்குகின்றார்.

இலங்கை பொருளாதார ரீதியாக நன்கு வளரச்சி கண்ட நாடுமல்ல, அத்துடன் இலங்கைக்கு பொருளாதார நெருக்கடி என்பது புதிதானதுமல்ல. எழுபதுகளில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி - காலஞ்சென்ற பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் ஆட்சியிலிருந்தபோதுகூட பெரும் பொருளாதார நெருக்கடியை இலங்கை சந்தித்திருந்தது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா மீது நாட்டு மக்கள் மிகவும் வெறுப்படைந்திருந்தனர். இதன்காரணமாக அவரோ அல்லது சிறீ லங்கா சுதந்திரக் கட்சியோ மீளவும் பதவிக்கு வரமுடியாதென்ற நிலையே காணப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் சிறிமாவோ அம்மையார் நாட்டை விட்டு வெளியேறுமளவுக்கு மக்களின் எதிர்ப்பு காணப்பட்டிருக்கவில்லை.

ஆனால், தொண்ணூறுகளில் அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் அகால மரணத்தையடுத்து ஐக்கிய தேசிய கட்சி பல வீனமடைந்து சிறிமாவோவின் புதல்வி சந்திரிகா பணடாரநாயக்க குமாரதுங்க மிகப் பலத்தோடு இலங்கையின் முதலாவது பெண் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக ஆட்சிப் பீடம் ஏறினார். அத்துடன், தமது தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்காவையும் பிரதமராக்கியிருந்தார்.

எனவே சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை மிகவும் வெறுத்து ஒதுக்கிய மக்கள் இரு தசாப்தங்களின் பின்னர் மீளவும் அக்கட்சியை ஆட்சிப் பீடமேற்றினர். இதன் மூலம் தனிப்பட்ட வகையிலோ அல்லது கட்சி ரீதியாகவோ ஏற்படும் அரசியல் ரீதியான மாற்றங்கள் ஒரு ஜனநாயக நாட்டில் நீடித்து நிலைப்பதில்லை என்பதே தெளிவாகும்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியே நிறைவேற்றதிகார ஆட்சிமுறையை வெகுவாக சாடியிருந்தது. ஆனால், ஐக்கிய தேசிய கட்சியைவிட சிறீ லங்கா சுதந்திர கட்சியே நிறைவேற்றதிகார ஆட்சிமுறையில் நீண்டகாலம் இருந்துள்ளது. இன்றுவரை அக்கட்சி ஆட்சி அதிகாரங்களில் செல்வாக்கு செலுத்தி வருகின்றது. அத்துடன், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை அடிப்படையாக கொண்ட மூன்று ஜனாதிபதிகள் இலங்கையில் இதுவரை ஆட்சி பீடமேறியுள்ளனர். கோட்டாபய ராஜபக்ஷ சிறீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் ஜனாதி பதியானாலும்கூட அந்தக் கட்சியும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாரம்பரியத்தில் - ஒத்தகொள்கையோடே உருவாக்கம்பெற்றிருந்தது.

இத்தகைய பின்னணியில் இரு மாதங்களுக்கு முன்னர் காலிமுகத்திடலில் இடம்பெற்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தை அடுத்து நாட்டைவிட்டு வெளியேறவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளான முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நள்ளிரவு மீளவும் நாடு திரும்பியுள்ளார்.

இலங்கையை விட்டு வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரின் பாரியார் அனோமா ராஜபக்ஷவும் முதலில் மாலைதீவிலும் பின்னர் சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் அடைக்கலம் தேடிய பின்னர் தாயகம் திரும்பியுள்ளனர்.

இந்த மூன்று நாடுகளும் மனிதாபிமான அடிப்படையில் கோட்டாபயவுக்கும் அவரின் மனைவிக்கும் அடைக்கலம் கொடுத்திருந்திருக்கலாம். ஆனால், அவருக்கு நீண்டகால அடிப்படையில் தஞ்சமளிப்பதில் இந்த மூன்று நாடுகளும் தயக்கம் காட்டியிருந்ததையே அவதானிக்க முடிந்திருந்தது.

சர்ச்சைக்குள்ளான நாடுகளின் தலைவர்கள் பலர் வேறு நாடுகளில் அடைக்கலம் புகுந்து நீண்ட காலம் தாம் தஞ்சம் கோரிய நாடுகளிலேயே தங்கியிருந்த வரலாறுகளும் உண்டு. ஆனால், கோட்டாபய ராஜபக்ஷவைப் பொறுத்தவரை அவர் சென்றிருந்த நாடுகள் தற்காலிகமாக அவருக்கு அடைக்கலம் அளிக்க முன்வந்திருந்தனவே தவிர, நீண்டகால அடிப்படையில் அவரை தமது நாடுகளில் தங்கியிருக்க இடமளிக்கவில்லை.

இதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷவின் தவறான பொருளாதார கொள்கைக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் வெடித்து அவர் நாட்டை விட்டு வெளியேறி பின்னர் மீளவும் நாடு திரும்பியுள்ள ஐம்பது நாட்கள் காலப்பகுதியில் நாட்டில் பொருளாதார ரீதியாக நம்பிக்கையளிக்கக்கூடிய மாற்றங்கள் எதுவும் நடந்துள்ளனவா என்று நோக்கும் போது எதுவுமே நடக்கவில்லை என்றே குறிப்பிடமுடியும்.


தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூலமாக நாடு முன்னேறத்தைக் காணுவதற்கான அறிகுறியும் தென்படவில்லை. இத்தகைய பின்னணியில் கோட்டாபய ராஜபக்ஷவின் மீள் பிரவேசம் இலங்கை அரசியலில் எத்தகைய தன்மைகளுக்கு இடமளிக்கும் என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ இதுவரை மீளவும் தாம் அரசியலில் இறங்கப்போவது பற்றி எனையும் கூறவில்லை. அவரை அரசியலுக்கு அறிமுகப்படுத்திய அவரின் சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ கோட்டாபய ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலம் பற்றி அவரே முடிவு எடுக்கட்டும் என்று கூறியுள்ளார். இருந்தபோதிலும் கோட்டாபய ராஜபக்ஷ மீளவும் அரசியலில் ஈடுபடுவதை அவரின் உறவினர்கள் பலர் விரும்பவில்லை.

ஆயினும், கோட்டாபய ராஜபக்ஷவின விசுவாசிகள் பலர் அவர் மீளவும் அரசியலில் குதிக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றனர். இதன் மூலம் கோட்டாபயவின் எதிர்காலத்தைவிட தமது எதிர்காலத்தை அவரை மையப்படுத்தி கட்டி எழுப்பலாம் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

எனவே சூனியமாகப்போயுள்ள கோட்டாபய ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலம் எவ்வளவு தூரம் எதிர்காலத்தில் பிரகாசமடையும் என்பது விடைகாணப்பட முடியாத கேள்வியாகவே இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 05 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 19
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : தசமி




**மேடம்**
அமைதி காக்க வேண்டிய நாள். அடுத்தவர்கள் விஷயத்தில் தலையிட வேண்டாம். குடும்பத்தினரின் ஆலோசனை நன்மை தரும்.உறவுகளால் சில சங்கடங்களுக்கு ஆளாவீர்கள்.

**இடபம்**
நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். குடும்பத்தினருடன் கோயிலுக்கு செல்வீர்கள். அக்கம் பக்கத்தினர் ஆதரவு உண்டாகும். உங்களுடைய செயல்களில் வெற்றி காண்பீர்கள்.

**மிதுனம்**
குடும்ப பிரச்னைகளைத் தீர்த்து வைப்பீர்கள். எதிரிகள் உங்களிடம் சரணடைவர். வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றமான நிலை உண்டாகும்.

**கடகம்**
பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த வரவு உண்டு.யோகமான நாள். நீண்ட நாளாக திட்டமிட்டிருந்த ஒரு வேலையை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்**
இன்று எதிர்பாராத பயணம் உண்டாகும். சந்திக்க நினைத்தவர்களை இன்று சந்தித்து மகிழ்வீர்கள். நண்பர்களிடம் ஏற்பட்ட பிரச்னை தீரும்.வியாபாரத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளை சரி செய்வீர்கள்.

**கன்னி**
இன்று தைரியமாக ஒரு முடிவை எடுப்பீர்கள். வீடு கட்டும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.பெற்றோர் வழியில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும். உங்களுடைய திறமை வெளிப்படும்.

**துலாம்**
தம்பதி இடையே ஒற்றுமை கூடும்.வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும். உறவினர் உங்கள் வீடு தேடி வருவார்கள். கூட்டுத் தொழில் தொடங்கும் முயற்சி இன்று நிறைவேறும்.

**விருட்சிகம்**
மனக்குழப்பம் அதிகரிக்கும். உங்களது செயல்களில் தடுமாற்றம் ஏற்படும். யோசித்து செயல்பட வேண்டிய நாள். பிறரது விஷயத்தில் தலையிட வேண்டாம். உங்கள் எதிர்பார்ப்பு இழுபறியாகும்.

**தனுசு**
அலைச்சல் அதிகரிக்கும். நெருக்கமானவர்களிடம் மனஸ்தாபம் ஏற்படும்.மறைமுக எதிரிகளால் தொல்லை உண்டாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாமல் இழுபறியாகும்.

**மகரம்**
திட்டமிட்டு செயல்படுவீர்கள். குல தெய்வ வழிபாடு நன்மை தரும்.உங்களுக்கு வர வேண்டிய பணம் வீடு தேடி வரும். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நினைத்ததை முடிப்பீர்கள்.

**கும்பம்**
உங்கள் எண்ணம் நிறைவேறும். நீங்கள் எதிர்பார்த்த பணம் வரும். பிறரது நலனில் அக்கறை செலுத்துவீர்கள். வாழ்க்கைத் துணையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி பாராட்டு பெறுவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். புதிய சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும்.மனக் குழப்பம் தீரும். விலகிச் சென்றவர்கள் உங்களைத் தேடி வருவார்கள்.இழுபறியாக இருந்த ஒரு முயற்சி இன்று நிறைவேறும். மகிழ்ச்சி கூடும்.

# உச்ச நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்குங்கள்

## முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை

சென்னை, செப். 05

உச்ச நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டுமென உச்ச நீதிமன்ற நீதிபதி எஸ். கே. கௌலிடம் முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

“உச்சநீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்க வேண்டும். மேலும், தென்னிந்திய மக்கள் பயன்பெறும் வகையில் உச்சநீதிமன்றத்தின் கிளையை சென்னையில் அமைக்க வேண்டும்.

நீதிபதிகள் நியமனத்தில் சமூகநீதி பின்பற்றப்பட வேண்டும். சென்னையில் அமைந்துள்ள பல்வேறு பாரம்பரிய கட்டிடங்களை நாம் செம்மை மாறாமல் பாதுகாக்க வேண்டும். நீதித்துறைக்கு உட்கட் டமைப்பு வசதி ஏற்படுத்துவது மகிழ்ச்சி அளிக்கிறது. பாரம்பரிய கட்டிடங்களை பாதுகாப்பது என்பது வரலாற்றைப் பாதுகாப்பது பேன்றதாகும். சென்னை சட்டக் கல்லுரியை புதுப்பிக்கக் கூடிய பணியால் நான் பெருமைக் கொள்கிறேன். நீதியும் நேர்மையும் தமிழர்களின் வாழ்வியலில் கலந்தவை” என நீதித்துறை விழாவில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (ஐ)

# கோயில்களில் தமிழில் மட்டுமே அர்ச்சனை நடைபெறவேண்டும்!

## நாம் தமிழர் கட்சியினர் போராட்டம்!

திருப்போரூர், செப். 05

கோயில்களில் தமிழில் மட்டுமே அரச்சனை செய்ய வலியுறுத்தி நாம் தமிழர் கட்சி பிரசாரம் தொடங்கியுள்ளது. இதற்கான தொடக்க விழா தமிழறிஞர் இலக்குவனார் நினைவு நாளான நேற்றுமுன்தினம் திருப்போரூர் கந்தசுவாமி கோயிலில் நடைபெற்றது.

இதனை கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தொடங்கி வைத்து பின்னர் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

தமிழக கோயில்களில் தமிழில் மட்டும்தான் அர்ச்சனை செய்யப்பட வேண்டும். அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்பதை விட முக்கியமானது தமிழில் அர்ச்சனை நடைபெற வேண்டும் என்பது.

ஆண்டாள் தனது பாசுரத்தை தமிழில்தான் எழுதினார். திருவில்லிபுத்தூர் கோயிலில் கூட தமிழில் அர்ச்சனை இல்லை, பாசுரங்கள் தமிழில் பாடப்படுவதில்லை. இங்கு இந்து என்ற ஒன்று இல்லை. சைவ மதம்தான் எங்கள் மதம். சைவக்குரவர்கள்தான் இருக்கிறார்களே தவிர இந்து குரவர்கள் என்று யாரும் இல்லை.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு மாநிலம் பிரிக்கப்பட்ட பிறகு ஏன் சமஸ்கிருதத்தை புகுத்த வேண்டும். இதற்கென எந்த மாநிலமும் கிடையாது. யாரும் பேசுவதும் இல்லை. ஆகவே, கோயில்களில் தமிழ் ஒலிப்பதை நாங்கள் உரிமையாக கேட்போம் - இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# தமிழை காப்பது என்றால் தமிழினத்தை காப்பதாகும்

## திருமாவளவன்

சென்னை, செப். 05

தமிழத் தேசியத்தை எப்படி பார்க்க வேண்டும், இந்திய தேசியம் என்பதை எப்படி புரிந்துகொள்ள வேண்டும் என்று நிகழ்ச்சி ஒன்றில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தனது கருத்துகளால் விவரித்துள்ளார்.

தனித்தமிழ் இயக்கம் ஒரு நூற்றாண்டு வரலாறு புத்தகம் வெளியீட்டிலேயே அவர் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

‘‘எது தமிழ், எது தமிழ் இல்லை என்பதைக் கூட அறிய முடியாத அளவுக்கு தமிழோடு எல்லாம் கலந்து கிடக்கின்றன. தமிழ் தேசிய அரசியலுக்கு மொழி உணர்வு, மொழி பற்று போதாது. மொழியை பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வு தேவை. அது கோட்பாட்டின் பின்னணியோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். தமிழுக்கு என்று தனித்துவம், பாரம்பரியம், வரலாறு இருக்கிறது.

அதுபோல் தமிழ்மொழியை பேசக்கூடிய தமிழினத்துக்கு நீண்டநெடிய பாரம்பரியம் இருக்கிறது. தமிழ்மொழியின் தனித்தன்மை என்று சொன்னால் அது தமிழினத்தின் தனித்தன்மை. எனவே தமிழை காப்பாற்றுகிறோம் என்றால் தமிழினத்தை காப்பாற்றுகிறோம் என்று தான் பொருள்.

அப்படியென்றால் தமிழ் மொழியுடன், பிறமொழி கலக்கிறது என்றால் அது மொழி எதிர்ப்பல்ல, ஆதிக்கத்தின் எதிர்ப்பு. ஹிந்தி, சமஸ்கிருதத்தை எதிர்க்கிறோம் என்றால், அது வெறும் ஹிந்தி, சமஸ்கிருத மொழி எதிர்ப்பதல்ல. ஹிந்தி, சமஸ்கிருதம் பேசுவோரின் ஆதிக்க எதிர்ப்பு.

ஆகையால், எல்லாம் கோட்பாட்டின் அடிப்படையில் இருந்தால் அது நின்று நிலைத்து வலுபெறும். மொழி என்ற உணர்ச்சி மட்டுமே இருந்தால் அது நீர்த்துபோய் விடும். தமிழை காப்பாற்றுகிறேன் என்றால், தமிழ் இனத்தை காப்பாற்றுகிறேன் என்பதாகும். எனவே கோட்பாட்டின் புரிதலோடு தமிழ் தேசியத்தை பார்க்க வேண்டும்.

காங்கிரஸ் பேசிய இந்திய தேசியம் வேறு, கம்யூனிஸ்ட் பார்க்கின்ற ஒட்டுமொத்த இந்தியா என்பது வேறு, அம்பேத்கர் ஒருங்கிணைந்த இந்தியா என்று பார்த்த பார்வை வேறு, ஆர். எஸ். எஸ்., சங்பரிவார் பேசுகின்ற இந்திய தேசியம் வேறு. காந்தி காலத்தில் பேசப்பட்ட இந்திய தேசியம் ஆங்கிலேயர்களை விரட்டுவதற்காக நாம் அனைவரும் இந்தியன் என்ற நாட்டுப்பற்றின் அடிப்படையிலானது.

ஆனால், பா. ஜ. க, ஆர்எஸ்எஸ், சங்பரிவார் பேசுவது மதவெறியிலான இந்திய தேசியம். இந்துக்கள் தேசியம் என்று பேசுகிறார்கள். இந்தியர்கள் என்று சொல்லும்போது, வெள்ளையர்களுக்கு எதிரான வெறுப்பு அரசியல் தேவைப்பட்டது. இந்துக்கள் என்று சொல்லும்போது இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் வெறுப்பு அரசியல் தேவைப்படுகிறது. ஆகவே அவர்கள் சிறுபான்மை இனத்துக்கு எதிரான வெறுப்பு அரசியலை விதைக்கிறார்கள்.

சாதி, மதம் அடிப்படையில் ஆட்சி அமைந்தால் சாதி அடிப்படையில் பாதிக்கப்படுகின்றவர்கள் ஒருகாலமும் விடுதலை பெற முடியாது. பெண்கள் விடுதலை பெற முடியாது. பா. ஜ. க. மதவெறி தேசியத்தை கட்டமைக்க விரும்புகிறபோது. அவர்கள் பிராந்தியத்தை ஏற்க மாட்டார்கள். மண்டல கருத்தியல் வாதத்தை ஏற்கமாட்டார்கள். மொழி அடிப்படையிலான தேசியத்தை ஏற்க மாட்டார்கள். மொழி உணர்வு மதவெறி தேசியத்துக்கு எதிர்ப்பு. எனவே ஆர். எஸ். எஸ், சங்பரிவார் அமைப்புகளால் மொழிவழி தேசியத்தை ஒருகாலமும் ஏற்க முடியாது - என்றார். (ஐ)



## பக்திப் பாமலர்கள் பாகம் - 2 இறுவட்டு வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 05

கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்தின்மீது பாடப்பட்ட பக்திப் பாமலர்கள் - பாகம் 2 என்ற இசை இறுவட்டின் வெளியீட்டு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை ஆலய முன்றிலில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆலய தர்ம கர்த்தா மருத்துவர் ஜி. கேதீஸ்வரநாதன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் ஆசியுரையை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ செ. கைலாசநாதக் குருக்களும் வாழ்த்துரையை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனும் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதிமுதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி சந்திர மௌலீசன் லலீசனும் நயப்புரையை யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் நவரத்தினம் பரந்தாமனும் வழங்கினர்.

பதின்மூன்று பாடல்கள் கொண்ட இந்த இசை இறுவட்டை திரு வீடியோ விஷன் நிறுவனத்தினர் தயாரித்துள்ளனர். பு.சாயிதர்சன் இசை அமைத்துள்ளார். (ஐ)

## சந்நிதியில் தமிழக ஓதுவாரின் திருப்புகழ் இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 05

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி பெருந்திருவிழாவில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் தீர்த்தத் திருவிழா வரை தினமும் பிற்பகல் நான்கு மணிக்கும் இரவு சுவாமி திரு வீதியுலா நிறைவிலும் திருப்புகழ் பாமாலை இசைநிகழ்வு நடைபெறவுள்ளது.

தமிழகம் பழநி ஆலய ஓதுவார் திருமுறை இசைச் செல்வர்



வெ. விக்னேஷ் ஆறு முகம் பக்கவாத்திய சகிதம் இந்த இசை நிகழ்ச்சியை வழங்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# தலைக்கவசமின்றி மோ. சைக்கிளில் பயணித்த இளைஞர் விபத்தில் பலி!

**யாழ்ப்பாணம், செப். 05**

**தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவருகிறார்.**

வேலணை நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜெகதீபன் தனுசியன் (வயது -18) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் மது போதையில் இருந்தார் என்றும் வேகக் கட்டுப்பாட்டையிழந்து விபத்து ஏற்பட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரணமான இளைஞர் கடந்த 25ஆம் திகதி பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு சென்றுள்ளார். பின்னர் கடைக்கு செல்வதற்காக நண்பருடன் தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் அமர்ந்து சென்றுள்ளார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்தி சென்றவர் மதுபோதையில் இருந்துள்ளார். அவரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை. அவரும் தலைக்கவசம் அணியாமல் பயணித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டையிழந்து மதிலுடன் மோதியதால் பின்னாலிருந்த இளைஞன் தூக்கி வீசப்பட்டார். அவரின் தலை பலமாக மோதியதில் மயக்கமடைந்தார்.

உடனடியாக அவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும் 9 நாட்களின் பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி மரணமானார். மோட்டார் சைக்கிளை ஓட்டியவர் காயங்களுடன் தப்பித்துள்ளார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் இன்று மேற்கொண்டார். (ஐ)

# இளைஞர்களின் முன்மாதிரி செயலுக்கு குவியும் பாராட்டு!

மானிப்பாய், செப். 05

வீதியில் விழுந்து கிடந்த 2 பவுண் கைச்சங்கிலியை எடுத்த மூன்று இளைஞர்கள் அதனை மானிப்பாய் பொலிஸார் மூலமாக உரிமையாளரிடம் சேர்ப்பித்துள்ளனர்.

இளைஞர்களின் இந்தச் செயலுக்கு பொலிஸாரும் அப்பகுதியினரும் பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாகியப்பிட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை சங்கானை பகுதியை சேர்ந்த ச. சபேஷ் - வயது 32, ர. றெபீகன் வயது - 20, ம. கோகுலன் வயது - 25 ஆகியோர் சுன்னாகம் நோக்கிப் பயணித்துள்ளனர்.

அந்தச் சமயம் வீதியில் கிடந்த கைச்சங்கிலியை அவதானித்து அதனை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில், அந்தப் பகுதியை சேர்ந்த ஒருவர் தனது கைச்சங்கிலியை தவறவிட்டுள்ளார் என்று பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அவரை அழைத்த பொலிஸார் நகையை கண்டெடுத்தவர்களையும் அழைத்து அவர்கள் மூலமாகவே அந்த நகையை உரிமையாளரிடம் வழங்க வைத்தனர்.

இந்நிலையில் மானிப்பாய் பொலிசார் குறிப்பிட்ட மூன்று இளைஞர்களின் முன்மாதிரியான செயல்பாட்டுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

அண்மைகாலமாக யாழ்ப்பாணத்தில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்து வருகின்ற நிலையில் இம்மூன்று இளைஞர்களினதும் செயற்பாடு முன்னுதாரணமாக கொண்டு பிரதேச மக்கள் தமது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். (ஐ)

# யாழ். மாவட்ட சித்த மருத்துவமனை அச்சுவேலியில் சேவையை ஆரம்பித்தது!

யாழ்ப்பாணம், செப். 05

யாழ். மாவட்ட சித்த மருத்துவமனை தற்போது அச்சுவேலி செல்வநாயகபுரத்தில் அமைந்துள்ள சிறுவர் நந்தவனம் பாடசாலை (மக்கோனா) அருகில் இடம்பெற்று வருகின்றது.

இங்கு பொதுமக்கள் இலவச மருத்துவ சேவையை பெற்றுக்கொள்ள முடியும்.

பொதுவான நோய்களுக்கான வெளிநோயாளர் சிகிச்சை பிரிவு இடம்பெற்று வருகின்றது.

வெளிநோயாளர்களை மருத்துவர்கள் பார்வையிடும் நேரம் - திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணிமுதல் பிற்பகல் 4மணி வரையும், சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 8மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் இடம்பெறும்.

அத்துடன் கடந்த 01ஆம் திகதியிலிருந்து தங்கி நின்று கிசிச்சை பெறும் உள்ளக நோயாளர் விடுதி நோயாளர்களின் நலன் கருதி சகல வசதிகளுடனும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சித்த மருத்துவமனையில் வதரோகம், சிறுவர் நோய்கள், தோல் நோய்கள், சுவாச நோய்கள், பெண்களுக்கு ஏற்படும் நோய்களும் அதற்கான தீர்வுகளும், சலரோகம், குருதி அமுக்கம், உடற்பருமன், குறிப்பாக தொற்று நோய்கள், தொற்றா நோய்கள் என பலதரப்பட்ட நோய்களுக்கான சிகிச்சைகள், காய்ச்சல், தடிமன். சளி,தும்பல் (பீனிசம்), தலைமுடி உதிர்தல், முகப்பருக்கள்) அக்குபஞ்சர் சிகிச்சை முறை, வர்ம சிகிச்சை, பஞ்சகர்ம சிகிச்சை, அட்டை விடுதல் (வரிக்கோசு), சுட்டி முறை சிகிச்சை (ஆணிக்கூடு அகற்றுதல்) பாரம்பரிய வைத்திய முறையிலும் சிகிச்சைகள் இடம்பெறுகின்றன.

நெறிவு முறிவு சிகிச்சை முறை, பழைய நோக்களுக்கு பத்துக்கட்டுதல், உளுக்கு, சுழுக்கு பார்த்தல் போன்ற பல தரப்பட்ட சிகிச்சை முறை திறம்பட பாரம்பரிய வைத்தியர்களினால் வழங்கப்பட்டு வருகின்றது.

உள்நாட்டு, வெளிநாட்டு நோயாளர்கள் கட்டணம் செலுத்தி விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் சிறப்பு மருத்துவ சேவையும் இடம்பெறவுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கு ஏற்ற வகையில் நோயாளர் விடுதி அமைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான தனி அறை,மலசல கூடம், உணவு, சிறந்த சூழலுடன் இசைந்த சிறப்பு மருத்துவ சேவையும் வழங்கப்படவுள்ளது.

இந்த சேவையைப் பெற விரும்புகின்ற நோயாளர்கள் முற்பதிவை சித்த வைத்திய சாலையில் பதிவு செய்து கொள்ள முடியும் - தொலைபேசி இலக்கம் -077 378 2739, 021 221 2809 என்று மருத்துவ மனை நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஐ)



# யாழ். மாநகரின் மத்தியில் வீதியின் நடுவே பாரிய குழி!

### பொதுமக்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், செப். 05

யாழ்ப்பாணம் மாநகரின் மத்தியில் பாரய குழி ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

யாழ். மத்திய பேருந்து நிலையத்துக்குப் பின்புறமாக உள்ள ஞானவைரவர் ஆலய வீதியின் நடுவே கழிவு நீர்செல்லும் வாய்க்கால் செல்லும் பகுதியிலேயே இந்தக் குழி ஏற்பட்டுள்ளது. இதனால், யாழ் நகரில் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ். மாநகர சபைக்கு சொந்தமான குறித்த பகுதியில் வீதியின் நடுவில் போக்குவரத்துக்கு இடையூறாகவுள்ள குழி திருத்தப்படவோ அல்லது வீதியால் பயணிப்போருக்கு அவ்விடத்தில் பாரிய குழி உள்ளது என்ற எச்சரிக்கை போடுவதற்கும் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்காமைக்கு பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த குழி வீதியின் நடுவில் காணப்படுவதன் காரணமாக அவ்விடத்தில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இலங்கை - இந்திய உறவை எவராலும் பிரிக்க முடியாது!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு,செப்.05

**இலங்கையையும் இந்தியாவையும் எவராலும் பிரிக்க முடியாது என வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**



இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் பல நூற்றாண்டுகளாக தொடர்வதாகவும், அது வலுவாக தொடரும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர், ஏனையோர் கோரிக்கைகளை முன்வைக்கும் போது இந்தியா இலங்கைக்கு தனது ஆதரவை ஒரு முக்கியமான கட்டத்தில் வழங்கியது.

சுதந்திரத்தின் பின்னர் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருகிறது. இந்தியாவின் ஆதரவின்றி இலங்கை மக்கள் இன்னொரு நாள் போராடி உயிர் பிழைத்திருக்க மாட்டார்கள்.

இலங்கை இன்னும் நெருக்கடியில் இருந்து வெளியேறவில்லை. எனினும் கட்டமைப்புகள் மற்றும் பொறிமுறைகள் இந்தியாவின் ஆதரவுடன் விடாமுயற்சியுடன் இருப்பதால், நெருக்கடியை சமாளிக்க நாடு போராட முடியும்.

ஈராக், லிபியா மற்றும் வெனிசுலா போன்ற நாடுகளில் வளங்கள் ஏராளமாக இருந்தபோதிலும், அவற்றின் அமைப்புகள் வீழ்ச்சியடைந்தாலும், அந்த நாடுகளால் வாழ முடியவில்லை.

எனவே நெருக்கடி நிலை முழுவதும் இந்தியா அளித்த ஆதரவு பாராட்டுக்குரியது.

அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இது குடும்ப உறுப்பினர்களிடையே கூட பொதுவானது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் யாரும் வர முடியாது. இந்தியாவின் முன்னேற்றம் மற்றும் செழிப்பு இலங்கைக்கு நன்மை பயக்கும்.

எந்த நாடும் தனியாக முன்னேறவில்லை, ஆனால் பிராந்தியங்களாக முன்னேறுகின்றன. இது வட அமெரிக்கா, மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும் ஆசியான் பிராந்தியங்களின் வளர்ச்சியால் தெளிவாகத் தெரிகிறது.

எனவே இந்தியாவின் அபிவிருத்தி இலங்கைக்கும் பிராந்தியத்துக்கும் நன்மை பயக்கும் - என்றார். (ஐ)

# மின்சார வாகன இறக்குமதி விண்ணப்ப படிவம் வெளியீடு!

கொழும்பு, செப். 05

மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.

இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் உள்ளடங்கிய சுற்றறிக்கையை அமைச்சு அண்மையில் வெளியிட்டிருந்தது.

மேலும் இதற்கான அனுமதி இந்த ஆண்டு டிசம்பர் வரை செல்லுபடியாகும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். (ஐ)

# 400 எரிபொருள் நிலையங்கள் மூடப்பட வேண்டிய நிலையில்!

கொழும்பு, செப். 05

400 நிரப்பு நிலையங்கள் மூடப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்று எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குமார் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிமுகப் படுத்தியுள்ள புதிய கட்டண முறையின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள், அடுத்த நாளுக்கான எரிபொருளை பெற்றுக் கொள்ள, முன்கூட்டியே பணம் செலுத்தும் திட்டத்தை, பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அரசாங்கம் 700 எரி பொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கவுள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இரு வேறிடங்களில் விபத்து குழந்தை உட்பட இருவர் பலி!

கொழும்பு, செப். 05

நேற்று முன்தினம் பேராதனை, மஹரகமவில் இடம்பெற்ற விபத்துகளில் குழந்தை உட்பட இருவர் உயிரிழந்தனர். மேலும் சிலர் காயமடைந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி - பேராதனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கொழும்பிலிருந்து கண்டி நோக்கி பயணித்து கொண்டிருந்த தனியார் பஸ் எதிர்திசையில் வந்த முச்சக்கர வண்டியுடன் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில், இரண்டு வயது குழந்தையொன்று உயிரிழந்தது. முச்சக்கரவண்டி சாரதி மேலும் இரு பெண்கள் மற்றும் 2 சிறுவர்கள் காயமடைந்து பேராதனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று, கொழும்பு - மஹரகம பொலிஸ் பிரிவில் மிரிஹான - மஹரகம பிரதான வீதியின் மஹரகம சந்தியில் மோட்டார் சைக்கிளும் முச்சக்கர வண்டியும் மோதி விபத்து இடம்பெற்றது.

இதில், பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும், முச்சக்கர வண்டி சாரதியும் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 28 வயது இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இலங்கைக்கு எதிரான பிரேரணையை நிறைவேற்றப் பிரச்னைகள் இருக்காது!

## சுமந்திரன் எம். பி. நம்பிக்கை

கொழும்பு, செப். 05

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரில் இலங்கையின் பொறுப்புக்கூறல், நீதி மற்றும் மனித உரிமைகள், நல்லிணக்கம் தொடர்பில் புதிய பிரேரணையொன்று நிறைவேற்றப் படவுள்ளது.



இந்நிலையில் இந்தப் பிரேரணைக்கான ஆதரவுப் பட்டியலில் முக்கிய நாடுகள் இடம்பெறுள்ளன. இம்முறை பிரேரணையை நிறைவேற்றுவதில் பிரச்னைகள் எதுவும் இருக்காது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

புதிய பிரேரணை நிறைவேற்றம் தொடர்பில் அமெரிக்கா, சுவிற்சர்லாந்து மற்றும் நோர்வே நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகருடன் நடைபெற்ற முக்கிய கலந்துரையாடல்களின்போது மேற்படி விடயம் உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# கோட்டாபய தப்பியோடவோ விரட்டியடிக்கப்படவோ இல்லை

## பஸில் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, செப். 05

"கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டுத் தப்பியோடவும் இல்லை. அவர் விரட்டியடிக்கப்படவும் இல்லை."

- இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜூலை 09 போராட்டத் தையடுத்து நாட்டை விட்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ள நிலையிலேயே அவரின் சகோதரர் பஸில் ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், "நாட்டில் சில தரப்புக்களின் சதி முயற்சி யால் திடீரென எழுந்த கொந் தளிப்பு நிலைக்குத் தீர்வு காணவே கோட்டாபய ராஜபக்ஷ சுயமாக நாட்டைவிட்டு வெளியேறி ஜனாதிபதி பதவி யிலிருந்து விலகியிருந்தார்.

நாட்டில் தற்போது அமைதி நிலவுவதால், அவர் மீண்டும் இங்கு வந்துள்ளார். அவர் இலங்கைப் பிரஜை. ஒரு முன்னாள் ஜனாதிபதி.



இந்நிலையில், அவர் வெளிநாடுகளில் தங்க வேண்டிய அவசியம் இல்லை.

நாடு திரும்பியுள்ள அவருக்கு முன்னாள் ஜனாதிபதிக் குரிய சிறப்புரிமைகளை அரசு வழங்குகின்றது. அவர் விரும் பினால் மீண்டும் "மொட்டு" கட்சி ஊடாக அரசியலுக்குள் நுழையலாம். இது தொடர்பில் அவரே முடிவு எடுக்க வேண்டும்" - என்றார். (ஐ)

# நிறுத்தப்படும் அபாயத்தில் புற்றுநோய்க்கான சிகிச்சை!

## - மருந்துகள் தட்டுப்பாடே காரணம் -

கொழும்பு, செப். 05

மார்பக புற்றுநோயாளிகளுக்கு வழங்கப்படும் தடுப்பூசி உட்பட புற்றுநோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் 20 வகையான மருந்துகளுக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்களுக்கான தொடர் சிகிச்சைகள் நிறுத்தப்படும் நிலை உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, கராப்பிட்டி மற்றும் மருத்துவமனைகள் மற்றும் மஹரகம அபெக்ஷா வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளில் புற்றுநோய் தடுப்பூசி உள்ளிட்ட மருந்துகளுக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

1000 மார்பக புற்றுநோய் தடுப்பூசிகளை பெறுவதற்கு கொள்வனவு அனுமதி வழங்கப்பட்ட போதிலும் சுமார் 500 தடுப்பூசிகளே பெறப்பட்டு வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன என்று மருத்துவமனையின் பணிப்பாளர்கள் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளனர்.

புற்று நோயாளர்களுக்கு தொடர்ச்சியாக சிகிச்சை அளிக்க வேண்டியுள்ள போதிலும், இந்த மருந்துகள் இல்லாததால் நோயாளர் பராமரிப்பு சேவைகள் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மஹரகம வைத்தியசாலையில் வருடாந்தம் சுமார் 3,000 புற்று நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்றனர். நாளாந்தம் சுமார் 1,000 நோயாளர்கள் உள்நோயாளிகளாகவும் வெளிநோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கோதுமை மா இறக்குமதி டுபாய், துருக்கியுடன் பேச்சு!

கொழும்பு,செப்.09

**நாட்டிற்கு தேவையான கோதுமை மா தேவையை பூர்த்தி செய்ய குறைந்த விலையில் இறக்குமதி செய்வது தொடர்பில் துருக்கி மற்றும் டுபாயில் உள்ள கோதுமை மா ஏற்றுமதியாளர்களுடன் பேச்சு நடத்தப்பட்டு வருவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

தட்டுப்பாடு காரணமாக சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களிலும் கோதுமை மாவின் சில்லறை விலை அதிகரித்துள்ளது. ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் மொத்த விலை ரூ.350 -400 வரையிலும், சில்லறை விலை ரூ. 360 - 380 வரையிலும் விற்பனையாகி வருகிறது.

"ரஷ்ய-உக்ரைன் போர் காரணமாகவும் இந்தியா தற்போது பல உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதைத் தடை செய்ததாலும் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

இலங்கையில் இரண்டு பெரிய நிறுவனங்கள் கோதுமை மாவின் உள்ளூர் உற்பத்தி செயல் முறையில் ஈடுபட்டுள்ளன. அவை மொத்த சந்தைக்கு வாரந்தோறும் தங்கள் பங்குகளை வெளியிடுவதற்கு அமைச்சுடன் உடன்படிக்கைக்கு வந்துள்ளன என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

# ‘செல்பி’ மோகத்தால் இளைஞர் உயிரிழப்பு

பதுளை, செப். 05

நீர்வீழ்ச்சிக்கு அருகில் சென்று செல்பி எடுக்க முயன்ற இளைஞர் தவறிவீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் பதுளை - ஹல்துமுல்ல - உடவெரிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. அங்குள்ள நீர்வீழ்ச்சியை பார்வையிட சென்ற இரு இளைஞர்களில் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் 24 வயதுடைய வெலமிடியாவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

ஹல்துமுல்ல பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து சனிக்கிழமை நீர்வீழ்ச்சிக்கு அருகில் சுமார் 200 அடி பள்ளத்திலிருந்து இளைஞனின் சடலத்தை மீட்டனர். (ஐ)

# முதலாம் தவணை கல்வி புதன்கிழமையுடன் நிறைவு

கொழும்பு, செப். 05

2022ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் நாளை மறுதினம் புதன்கிழமையுடன் நிறைவடையும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி இரண்டாவது தவணை எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இதேவேளை, தேசிய பாடசாலைகளில் இடைநிலை வகுப்புக்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகள் மற்றும் விண்ணப்பங்கள் தொடர்பான விடயங்கள் பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்கள் மற்றும் விண்ணப்பதாரிகளின் கோரிக்கைகளுக்கு அமைய பரிசீலனை செய்து அதற்கான தீர்மானங்கள், எதிர்வரும் காலங்களில் அறிவிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# பெண்கள், சிறுவர் விவகார அமைச்சை பெண் ஒருவருக்கே வழங்க வேண்டும்!

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, செப். 05

புதிய அமைச்சரவையை நியமிக்கும்போது பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு பெண்ணொருவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்

அண்மையில் இடம்பெற்ற ஆளும் கட்சி கூட்டத்தின்போதே பிரதமர் தினேஷ் குணவர்தன இந்த தகவல்களை தெரித்துள்ளார்.

இதேவேளை பெண்கள் மற்றும் குழந்தைகளின் தேவைகள் குறித்து நடைமுறை புரிதல் இல்லாத ஆண்களுக்கு இந்த அமைச்சை ஒதுக்குவது அர்த்தமற்ற செயல் என சுட்டிக்காட்டிய



பிரதமர், பெண்களின் பிரதிநிதித்துவத்தை பேண வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# நித்திரையிலிருந்த கணவனை மனைவி தாக்கியதில் காயம்!

கிளிநொச்சி, செப். 05

நித்திரையாகவிருந்த கணவன் மீது அதிகாலை வேளையில் மனைவி தாக்கியதில் காயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை பளை - புலோப்பளையில் இடம்பெற்றுள்ளது.

மனைவியின் தாக்குதலில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மனைவி மன உளைச்சலுக்கு உள்ளாகி இருக்கலாம் என்ற சந்தேகத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வவுனியாவில் மத முறுகல் நிலைமை; பொலிஸாரின் தலையீட்டால் சமரசம்!

வவுனியா, செப். 05

வவுனியா, இராசேந்திரங்குளம் மயானத்தை தூய்மைப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்ட போது அங்கு குழப்ப நிலை ஏற்பட்டது.

வவுனியா, இராசேந்திரங்குளம் மயானத்தின் ஒரு பகுதியில் கிறிஸ்தவர்களின் உடல் அடக்கம் செய்யப்படுகின்றது. ஒரு பகுதியில் இந்துக்களின் உடல் தகனம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், பிரதேச சபையின் அனுமதி பெற்று குறித்த மயானத்தை தனிநபர் ஒருவரின் நிதிப் பங்களிப்பில் தூய்மைப்படுத்தி சுற்றிவர நிழல் மரங்கள் நாட்டி, தகன கொட்டகை மற்றும் நீர்தாங்கி என்பவற்றை நிர்மாணிப்பதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்காக மயானத்தை உழவு இயந்திரம் மூலம் துப்பரவு செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது நீண்ட காலத்திற்கு முன் கிறிஸ்தவர்களின் உடல் புதைக்கப்பட்டு அடையாளமின்றி காணப்பட்ட சில இடங்களும் உழவு இயந்திரம் மூலம் சுத்தம் செய்யப்பட்டிருந்தது.

இதன்போது அங்கு வந்த கிறிஸ்தவ மதகுரு ஒருவரும், கிறிஸ்தவ மக்களும் தமது உறவினர்களின் உடல்கள் புதைக்கப்பட்ட இடங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், சுத்தம் செய்தமையால் அவற்றின் இடங்களை கண்டு பிடிக்க முடியவில்லை எனத் தெரிவித் தும் அங்கு நின்ற அபிவிருத்தி உத்தியோகத் தருடன் முரண்பட்டனர்.

அவர் நிலைமையை மக்களுக்கு தெளிவுபடுத்தியிருந்தார். இருப்பினும், அதனை ஏற்க மறுத்த கிறிஸ்தவ மதகுரு நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் குறித்த நடவடிக்கைக்கு எதிராக மக்களை அழைத்துச் சென்று முறைப்பாடு பதிவு செய்தார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு உண்மை நிலையை அறிந்து அதனை கிறிஸ்தவ மக்களுக்கு தெளிவுபடுத்தியதுடன், கல்லறைகளுக்கு பாதிப்பு ஏற்படவில்லை எனவும் உடல்கள் புதைக்கப்பட்டு அடையாளமின்றி இருந்தமையால் உழவு இயந்திரம் மூலம் சில இடங்கள் சுத்தப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, அந்த இடங்களை அடையாளம் தெரியும் படி மண் போட்டு உயர்த்தி விடுமாறு மக்களிடம் பொலிஸார் தெரிவித்தனர். இதனை மக்கள்ஏற்றுக்கொண்டனர் கிறிஸ்தவ, இந்து முரண்பாடுகளை ஏற்படாத வகையில் பொலிஸார் செயல்பட்டிருந்தனர். இதன்பின் அங்கு அமைதி நிலை ஏற்பட்டு தொடர்ந்தும் அபிவிருத்திச் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

# வெளிநாட்டில் வதிவோர் மூலம் இலங்கையர் எரிவாயு பெறலாம்!

## லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, செப். 05

கைபேசி செயலி ஊடாக வெளிநாட்டில் உள்ளவர்கள் லிட்ரோ எரிவாயுவை இலங்கையிலுள்ள தங்கள் உறவினர்களுக்கு டொலரில் கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொடுக்க சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்த லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ், வீடுகளுக்கே எரிவாயுவை விநியோகிக்கும் நடவடிக்கை மீண்டும் செயல்படுத்த எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், இதனூடாக எந்தவொரு நபருக்கும் இதற்கான செயலி ஊடாக




கட்டணத்தை செலுத்தி தங்களது வீடுகளுக்கே எரிவாயுவை பெற்றுக் கொள்ள முடியும். அடுத்த வாரம் முதல் இந்த செயலி அறிமுகப்படுத்தப் படவுள்ளது. (ஐ)

# எரிபொருள் தேவை, விநியோகம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது!

கொழும்பு, செப். 05

இந்த மாதம் மற்றும் அடுத்த மாதமான ஒக்ரோபருக்கு தேவைப்படும் எரிபொருள் மற்றும் எரிபொருள் விநியோகம் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பு வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தலைமையில் இடம்பெற்றது.

நாட்டில் உள்ள எரிபொருள் கையிருப்புக்கள், சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலைய உற்பத்திகள், விநியோகத் திட்டம் அவற்றில் காணப்படும் குறைபாடுகள் உள்ளிட்டவை குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பின் சில பகுதிகளில் கணிசமான எரிபொருள் வரிசைகள் மீண்டும் தோன்றியுள்ளன. இதற்கு விநியோக குறைபாடுகளே காரணம் என்று அமைச்சர் ஏற்கனவே தெரிவித்திருந்தார். அத்தோடு நாட்டில் போதுமான எரிபொருள் இருப்பு இருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

முறையாக செயல்படாத மற்றும் ஒத்துழைக்காத எரிபொருள் நிலையங்கள், முற்பதிவுகளை முறையாக வழங்காமை, பணம் செலுத்தாமை, கியூ. ஆர். குறியீடுகளின் போலி மற்றும் தவறான பயன்பாடு மற்றும் விநியோக முறையை டிஜிற்றல் மயமாக்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு



# 13ஆம் திருத்த சட்டம் முதலில் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா


கோப்புப்படம்

கடந்த கால ஆணைக்குழுக்கள் மற்றும் ஏனைய குழுக்களின் அறிக்கைகளை ஆராய்ந்து மதிப்பீடு செய்தல் மற்றும் நடவடிக்கை எடுத்தல் தொடர்பான ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ. எச். எம். டி. நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு என்னால் வழங்கப்பட்ட குறித்த வாக்குமூலம் தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தான் தெரிவித்த விடயங்களை ஈழநாடுவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அதன் முழுவிவரம் முழுமையாக அப்படியே வருமாறு,

"எம்மைப் பொறுத்த வரையில், இனப்பிரச்னை என்பது இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முன்னர் ஒரு விதமானதாகவும், ஒப்பந்தத்துக்குப் பின்னர் இன்னொரு விதமானதாகவுமே இருக்கின்றது. குறித்த ஒப்பந்தத்துக்கு முன்னர் இனவாத அரசாங்கமாக மாற்றாந்தாய் மனப்பாங்குடனேயே தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளை அது அணுகியிருந்தது. ஆனால், ஒப்பந்தத்திற்குப் பின்னார் அதில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன.

அரசாங்கத் தீர்மானங்களில் கொள்கை ரீதியான குணாம்ச ரீதியான, அணுகுமுறை ரீதியான மாற்றங்கள் இருப்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். துரதிர்ஷ்டவசமாக அப்போது தமிழ் தலைமைகளாக தம்மை வெளிப்படுத்திக் கொண்டோர் அதனை சரியாக கையாளவில்லை என்பதே என்னுடைய ஆதங்கமாக இருக்கின்றது. புண்ணுக்கு வலியா மருந்துக்கு வலியா என்றால் புண்ணுக்கு வலி என்பதே என்னுடைய நிலைப்பாடு. ஆனால், மருந்துக்கு வலி என்ற அடிப்படையிலேயே சக தமிழ் தரப்புக்களின் அணுகுமுறைகள் அமைந்திருந்தன.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு பின்னர் உருவாகிய அரசாங்கங்கள் பலவற்றில் அங்கம் வகித்த ஒருவர் என்ற அடிப்படையில், என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். பல கட்சிகளை கொண்டு அரசாங்கங்கள் உருவாக்கப்படுகின்றமையால் அதில் அங்கம் வகிக்கின்ற யாராவது, சில கருத்துக்களை சொல்லலாம். ஆனால் அவை அரசாங்கத்தின் தீர்மானங்களாக இருப்பதில்லை.

அதேபோன்று, தவறுகள் நடைபெறுமானால் அவற்றை நியாயமான முறையில் சுட்டிக் காட்டுகின்றபோது திருத்தப்படுவதற்கான சூழலே காணப்படுகின்றது. ஆனால் இந்தச் சூழலை தமிழ் தலைமைகள் சரியாக கையாள்வதற்கு முன்வராமையினாலேயே பிரச்சினை நீடித்துக் கொண்டிருக்கின்றது என்பதே எனது கருத்து. அரசியல் உரிமைப் பிரச்னையைப் பொறுத்தவரையில் அரசியலமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முதல்கட்டமாக முழுமையாக அமுல்படுத்துவதற்கான சூழலை ஏற்படுத்துவோமாக இருந்தால், அதிலிருந்து படிப்படியாக தமிழ் மக்களின் அபிலாசைகளை நோக்கி முன்னோக்கி நகரமுடியும். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் தேசிய நல்லிணக்கத்தையும் பரஸ்பர நம்பிக்கையையும் வலுப்படுத்த வேண்டும்.

தமிழ் கட்சிகள் பல இந்தியப் பிரதமருக்கு 13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பாக கடிதம் எழுதியுள்ளன. இந்தியாவாக இருந்தாலென்ன, ஏனையயாராக இருந்தாலும் இந்த விடயத்தில் ஒத்துழைப்புக்களையும் ஆலோசனைகளையும் வழங்கலாமே தவிர, ஒரு கட்டத்தை தாண்டி செயற்படுவது நடைமுறையில் சாத்தியமற்றது.

"அழுதும் பிள்ளையை அவளே பெற வேண்டும்" என்பார்கள், அதுபோன்று எமது பிரச்னைகளை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும். இந்தியா போன்ற நட்பு சக்திகளை தமிழர் தரப்பு மருத்துவச்சி போன்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று யுத்தத்தில் இறந்தவர்களை நினைவு கூருவதற்கான அனுமதி தொடர்பாகவும் கடந்த காலங்களில் இந்த விசாரணைக்குழு முன்னிலையில் வாக்குமூலங்களைப் பதிவு செய்தவர்கள் கோரிக்கை முன்வைத்திருந்தமையை அறியக் கூடியதாக இருந்தது.

உரிமைப் போராட்டத்தின் பெயரால் பலரும் உயரிழந்தார்கள். புலிகள் மேற்கொண்ட சகோதரப் படுகொலையால் நூற்றுக்கணக்கான ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ்., ஈரோஸ் போன்ற பல இயக்கங்களை சேர்ந்த போராளிகளும் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கந்தன் கருணை போன்ற வதை முகாம்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டன. இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குப் பின்னர், அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்த ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் உட்பட பல அரசியல் செயல்பாட்டாளர்கள் கொலை செய்யப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டுமிருக்கின்றனர். அதைவிட, யுத்தத்தில் அகப்பட்டும் - யுத்தத்தை சர்வதேச மட்டத்தில் நியாயப்படுத்துவதற்கான தந்திரோபாயமாகவும், தமது பாதுகாப்புக்கான மனித கேடயமாகவும் புலிகளால் மக்கள் பயன்படுத்தப்பட்டதுடன், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பாதுகாப்பு தரப்பினரிடம் செல்வதற்கு மக்கள் முற்பட்ட நிலையில் புலிகளால் சுடப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களுமாக, யுத்தம் நிறைவுக்கு வரும் வரை, ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்த அனைவரும் நினைவுகூரப்பட வேண்டியவர்கள்.

இதுதொடர்பாக, நல்லாட்சி என்று சொல்லப்பட்ட அரசாங்க காலத்தில் பாராளுமன்றில் தனிநபர் பிரேரணை ஒன்றை கொண்டு வந்திருந்தேன். இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் பெயரால் உயிரழந்த அனைவரையும் அவரவர்களின் உறவினர்கள் நினைவு கூருவதற்கும் அவரவர் விரும்பிய மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்குமான பொது நினைவு தினம் மற்றும் பொது நினைவுச் சின்னம் போன்றவை உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தேன். குறித்த பிரேரணையை வழிமொழிவதற்கு விருப்பமின்றி கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றை விட்டு ஓடி ஒளிந்த நிலையில் இன்னொரு கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் மூலம் குறித்த பிரேரணையை வழிமொழிந்து நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதே நிலைப்பாட்டிலேயே நான் தற்போதும் இருக்கின்றேன். ஆனால், அரசியல் உள்நோக்கங்களுக்காகவும், தென்னிலங்கை மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் தொடர்பான நம்பிக்கையீனங்களையும் ஏற்படுத்தும் வகையிலும் குறுகிய நலன்களுக்காக இவ்வாறான நினைவுகூருதல்கள் பயன்படுத்தப்படுமாயின் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது.

புலிகளின் ஆரம்ப கால உறுப்பினர்களில் ஒருவரான பண்டிதர் என்று அழைக்கப்பட்ட சின்னத்துரை இரவீந்திரனின் தாயார் அடிப்படை வசதிகள் கூட இல்லாத கொட்டில் வீட்டினுள் வாழ்ந்து வருகின்றார். அவருடைய வாழ்வாதாரம் தொடர்பாக யாரும் இதுவரை கண்டுகொண்டதில்லை. இராணுவத்தினரே வாழ்வாதார உதவிகளை வழங்குவதாக அந்த மூதாட்டியே ஊடகங்களிடம் சொல்லியுள்ளார். இந்நிலையில் புலிகளின் நினைவுகூரல் தினத்தன்று அந்த தாயாரின் வீட்டிற்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், கஜேந்திரன் போன்றோர் தனித்தனியாக அங்கே சென்று விளக்கேற்றி ஊடகங்களுக்கு படம் காட்டி விட்டு தென்னங்கன்று ஒன்றையும் வழங்கிவிட்டு வந்துள்ளனர். இவ்வாறான அரசியல் சுத்துமாத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றும் தெரிவித்தேன் என்றுள்ளது.

# மஹிந்தவின் கட்சியில் தனித்து இயங்கும் எம்பிக்கள்!

**ரஞ்சன் அருண் பிரசாத்**

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் அங்கம் வகிக்கும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுயாதீனமாக செயல்பட தீர்மானித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழனன்று விசேட உரையொன்றை ஆற்றிய, நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளருமான ஜீ.எல்.பீரிஸ், இந்த தீர்மானத்தை அறிவித்தார்.

இதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களான டளஸ் அழகபெரும, டிலான் பெரேரா, நாலக கொட ஹேவா, சரித்த ஹேரத், சன்ன ஜயசுமன்ன, கே.பி.எஸ். குமாரசிறி, குணபால ரத்னபால, உதயன கிரிந்திகொட, வசந்த யாப்பா பண்டார, உபுல் கலப்பத்தி, திலக்க ராஜபக்ஷ, லலித் எல்லாவல மற்றும் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரே சுயாதீனமாக செயற்பட தீர்மானித்துள்ளனர்.

"எமது நாடு இன்று பாரிய பிரச்னையொன்றை எதிர்நோக்கியுள்ளது. கடந்த காலங்களிலும் இவ்வாறான பிரச்சினைகளை சந்தித்திருந்தோம். 30 வருட கால யுத்தம் இருந்தது. அதன் பின்னர் சுனாமி ஏற்பட்டது. கோவிட் 19 தொற்று ஏற்பட்டது. இந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும், சரியாக வழி நடத்திய நாடாளுமன்றம் எமது நாட்டில் இருந்தது. எனினும், இன்று அந்த சந்தர்ப்பம், அந்த வலு எமக்கு இல்லை.

### தனித்து செயல்பட என்ன காரணம்?

நாட்டில் காணப்படுகின்ற பொது கருத்துக்களுக்கும், நாடாளுமன்றத்தில் காணப்படுகின்ற கருத்துக்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது. இந்த நாடாளுமன்றம் 2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நியமிக்கப்பட்டது. நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து எல்லா விடயங்களும் செய்வதற்கு ஆணையை தாருங்கள் என நீங்கள் மக்களிடம் கேட்கவும் இல்லை. அவ்வாறான வெற்றியை மக்கள் எமக்கு வழங்கவும் இல்லை.

சிறிலங்கா பொதுஜன பெரமுன என்ற விதத்தில், நாம் மிகவும் தெளிவான வேலைத்திட்டமொன்றை மக்களுக்கு வழங்கியிருந்தோம். அதற்கு பாரிய வரவேற்பு கிடைத்தது. அந்த மக்கள் ஆணை, முழுமையாக திரிவடைந்தது. அன்று நாம் கூறிய விடயங்களுக்கும், இன்று நாம் செய்கின்ற விடயங்களுக்கும் இடையில் வானும், மண்ணும் என்ற அளவிற்கு வேறுபாடு காணப்படுகின்றது.

ஜனநாயக சமூகத்திற்கு தேர்தல் அவசியமானது. எனினும், தேர்தல் நடத்தப்படவில்லை. அதனால், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சுயாதீன குழுவாக எதிர்கட்சி ஆசனத்தை பெற்றுக்கொள்ள நாம் எதிர்பார்க்கின்றோம்." என ஜீ.எல். பீரிஸ் தெரிவிக்கின்றார்.

### அதிகரிக்கும் சுயேச்சைகளின் எண்ணிக்கை

இவ்வாறு சுயாதீனமாக எதிர் கட்சி ஆசனத்தில் 13 பேர் அமர்ந்ததை அடுத்து, எதிர்கட்சி ஆசனத்தை பிரதிநிதித்துவப்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதன்படி, 225 பேரை கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில், ஆளும் கட்சி ஆசனத்தில் 115 உறுப்பினர்களும், எதிர்கட்சி ஆசனத்தில் 109 உறுப்பினர்களும் அமர்ந்துள்ளனர்.



## உடைகிறதா "ராஜபக்ஷ கோட்டை"?

இதேவேளை, சிறிலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன, ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து இது தொடர்பில் கருத்துரைத்தார்.



"கட்சிக்குள் இருக்க முடியவில்லை என்றால், அரசாங்கத்திற்குள் இருக்க முடியவில்லை என்றால், அதிலிருந்து விலகுவதற்கு எந்தவொரு நபருக்கும் ஜனநாயக ரீதியில் உரிமை உள்ளது. இது புதிய விடயம் கிடையாது. இது பழைய விடயம். இவ்வாறு கூறுவோர் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முயற்சிக்கின்றார்களா? அப்படி இல்லையென்றால், வீழ்ந்துள்ள நாட்டை மேலும் வீழ்ச்சி பாதைக்கு கொண்டு செல்ல முயற்சிக்கின்றார்களா?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

இந்த சந்தர்ப்பத்தில் அனைவரும் ஒன்றிணைந்து, இதனை செய்ய வேண்டும். இந்த இடத்தில் இருவர் தேசிய பட்டியல் ஊடாக வருகைத் தந்தவர்கள். எமது கட்சியிலிருந்து சுயாதீனமாகி, கட்சியின் கொள்கைக்கு எதிராக செயற்பட்டவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கின்றோம். அவர்களை அவர்களது பதவிகளிலிருந்து விலத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கட்சிக்குள் இருக்க முடியாமையினாலேயே, அவர்கள் சுயாதீனமாகியுள்ளனர். புதிய தவிசாளர் ஒருவர் சிறிலங்கா பொதுஜன பெரமுன விற்கு தெரிவு செய்யப்படுவார்" என ரோஹித்த அபேகுணவர்தன தெரி வித்தார்.

இதேவேளை, ரணில் விக்ரமசிங்க 134 மேலதிக வாக்குகளினால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அன்றைய தினத்திலேயே இந்த 13 பேரும் எதிர்கட்சியில் அமர்ந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

இவ்வாறு எதிர்கட்சி ஆசனத்தில் சுயாதீனமாக அமர்ந்தவர்கள், ரணில் விக்ரமசிங்கவின் ஜனாதிபதி தெரிவுக்கு எதிராக வாக்களித்தவர்கள் எனவும் அவர் கூறுகின்றார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய 13 பேர், சுயாதீனமாக எதிரணி ஆசனத்தில் அமர்ந்தமை குறித்து, ஐக்கிய மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன், தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டிருந்தார்.

"நேரடி மொட்டு கட்சியின் 12 எம்பீக்கள், எதிரணியில் அமர்ந்தார்கள். இவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் சேரவில்லை. தனியணி. ராஜபக்ஷ சாம்ராஜ்ஜியம் உடை கிறது. இதுதான் இங்கே முக்கியம். இந்த இனவாத சாம்ராஜ்யம் மீளவும் தலையெடுக்க விடக் கூடாது. அவர்களது பலமே மூவரும் ஒன்றி ணைந்து, மீளுருவாவது தான். கோதா நாடு திரும்புவதில் இதுவும் ஒரு மறை காரணம். அதை கண்காணிக்கனும். ஒருவரை வஞ்சகமாக புகழ்ந்து, மற்ற இருவரை வெஞ்சகமாக இகழ்வதும் இதனால்தான். நம்ம சில அறிவாளிகளுக்கு இது புரிவதில்லை. என்னங்க செய்ய...?" என்று மனோ கணேசன் கூறியுள்ளார்.







**நாடாளுமன்ற உறுப்பினர்களான டளஸ் அழகபெரும, டிலான் பெரேரா, நாலக கொட ஹேவா, சரித்த ஹேரத், சன்ன ஜயசுமன்ன, கே.பி.எஸ்.குமாரசிறி, குணபால ரத்னபால, உதயன கிரிந்திகொட, வசந்த யாப்பா பண்டார, உபுல் கலப்பத்தி, திலக்க ராஜபக்ஷ, லலித் எல்லாவல மற்றும் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரே சுயாதீனமாக செயற்பட தீர்மானித்துள்ளனர்.**


# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுங்கள் எது?



1) 2) 3)

38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?





1) 2) 3)

* ⌗ * ⌗

39. 3 4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

02) அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

## கல்வி tv CHANNEL-1

**05.09.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**05.09.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# உயர்தரப் பரீட்சை முடிவுகளில் கிழக்கு மாகாணம் முதலிடம்!

## மாகாண கல்வி பணிப்பாளர் பெருமிதம்

**திருகோணமலை, செப். 05**

**2021 ஆம் ஆண்டின் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வில் பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேற்றின் அடிப்படையில் கிழக்கு மாகாணம் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்துள்ளார்.**

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 599 மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதியை பெற தகுதி பெற்றதுடன், 76.21 வீதம்பேர் சித்தியடைந்துள்ளனர்.

இந்த சாதனையைப் பெறுவதற்காக ஆலோசனைகளை வழங்கிய கிழக்கு மாகாண ஆளுநர் , பிரதம செயலாளர் மற்றும் கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் அவர்களுக்குத் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இதே போன்று கிழக்கு மாகாணத்திலுள்ள வலயக்



கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள், வளவாளர்கள் போன்றோர். தன்னுடன் இணைந்து இச் சாதனையைப் பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காகவும், அவர்களின் வழிநடத்தலில் அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னின்று உழைத்தமைக்காகவும் தனது மன மார்ந்த நன்றியை தெரிவித் துள்ளார்.

மாணவர்கள் தங்கள் விடா முயற்சியும் பெற்றோர்களின் ஊக்குவிப்பும் கிழக்கு மாகாணம் முதலிடத்தைப் பெறுவதற்கு காலாக அமைந்தது. இந்த வகையில் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மற்றும் உதவிகளை அளித்த அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார். (ஐ)



## ஆயித்தியமலை சதாசகாய மாதா திருவிழா நேற்றுடன் நிறைவுற்றது

மட்டக்களப்பு, செப். 05

மட்டக்களப்பு ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னை திருத்தலத்தின் 68ஆவது ஆண்டு திருவிழா நேற்று இடம்பெற்ற கூட்டுத்திருப்பலியுடன் திருவிழா கொடியிறக்கப்பட்டு நிறைவுபெற்றது.

மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற திருத்தலமான ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னையின் வருடாந்த திருத்தல திருவிழா கூட்டுத் திருப்பலியை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் பங்குத் தந்தையுடன் அருட்தந்தையர்கள் இணைந்து ஒப்புக் கொடுத்தனர்.

ஆயித்தியமலை தூய சதாசகாய அன்னையின் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா பங்கு தந்தை தலைமையில் கடந்த 26ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா ஒன்பது தினங்கள் தினமும் மாலை திருசெப மாலையுடன் திருப்பலி நடை பெற்றன.

நேற்று காலை நடைபெற்ற திருப்பலியை தொடர்ந்து அன்னையின் திருச்சுரூப பவனியும் அன்னையின் திருச்சுரூப ஆசீருடன் திருவிழா திருநாள் கொடியிறக்கத்துடன் வருடாந்த திருவிழா நிறைவுபெற்றது. (ஐ)

## மகள்மீது பாலியல் துன்புறுத்தல் தந்தை பொலிஸாரால் கைதானார்!

காத்தான்குடி, செப். 05

காத்தான்குடியில் 15 வயதான தனது மகளை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டில் 44 வயது தந்தை ஒருவரை தாம் கைது செய்துள்ளனர் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னை தனது தந்தை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கினார் என்று பாதிக்கப்பட்ட சிறுமி, சிறுவர் பிரிவின் 1921 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அளித்த முறைப்பாட்டுக்கு அமையவே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து குறித்த வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார் சிறுமியின் தந்தையாரை கைது செய்ததுடன் பாதிக்கப்பட்ட சிறுமியை மருத்துமவனையில் சேர்ப்பித்தனர்.

கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ)

## உதவித்திட்டம்

கல்முனை, செப். 05

கல்முனை பிராந்தியத்தை மையப்படுத்தியதாக பல்வேறுபட்ட வாழ்வாதார மேம்பாட்டு நல திட்டங்களையும், நிவாரண விநியோகங்களையும் கல்முனையன்ஸ் போரம் முன்னெடுத்து வருகின்றது.

இதன்படி, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனை, இஸ்லாமபாத் மற்றும் நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களிலிருந்து பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு தலா ரூபாய் 20,000 நிதி நிவாரணம் இந்த நிகழ்வில் வழங்கிவைக்கப்பட்டது.

கணவனை இழந்த மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் தலைமை தாங்குகிற குடும்பங்கள் இத்திட்டத்தின் பயனாளிகளாக தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். (ஐ)

## ஊருக்குள் புகுந்த யானையால் தம்பலகாமம் மக்கள் அச்சம்!

திருகோணமலை, செப். 05

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் 98ஆம் கட்டை தாயிப் நகர் மற்றும் 97 சேனா வளி குளத்தை அண்டிய வயல் நிலப் பகுதியில் நேற்று அதிகாலை காட்டு யானை புகுந்ததால் மக்கள் அச்சமடைந்தனர்.

வயல் நிலங்கள் தற்போது சிறுபோக அறுவடைக்குத் தயாராகவுள்ளது. இந்நிலையில் யானை நெல் செய்கையை அழித்து செல்வதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

பசளையின்றி பெரும் சிரமத்துக்கு மத்தியில் நெற் செய்கையை செய்து அறுவடைக்கு இன்னும் இரு வாரங்கள் உள்ளநிலையில் தாம் இந்தப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

எனவே, காட்டு யானையிடமிருந்து தம்மையும் தமது வாழ்வாதாரத்தையும் பாதுகாக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் (ஐ)

## போதைப்பொருள் வியாபாரி பாடசாலை முன்பாக கைது!

கிண்ணியா, செப். 05

கிண்ணியா - அண்ணல் நகர் பகுதியில் அமைந்துள்ள அல் அதான் மகா வித்தியாலயத்துக்கு முன்னால் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்தவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைதான நபரிடம் 5.05 கிராம் நிறை கொண்ட ஹெரோயின் போதைப் பொருள் பொதி கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர், கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

கிண்ணியா -2, ரஹ்மானியா பகுதியைச் சேர்ந்த 44 வயதான குடும்பஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

இவர் நீண்ட காலமாக போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர் என விசாரணையின் போது தெரிய வந்துள்ளதாகவும், இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## கிழக்கு மாகாண விளையாட்டு போட்டி பட்டிருப்பு கலைவாணியில் ஆரம்பம்!

மட்டக்களப்பு, செப். 05

கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப வைபவம் நேற்று முன்தினம் பட்டிருப்பு குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி - புள்ளநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு தேசியக் கொடி, கிழக்கு மாகாணக் கொடி, மெயவன்மை கொடி என்பன ஏற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து போட்டிகள் இடம்பெற்றன.

கடந்த இரண்டு வருடங்களாக நாட்டின் அசாதாரண



சூழ்நிலை காரணமாக விளையாட்டுப் போட்டிகள் எதுவும் நடைபெறவில்லை. இந்நிலையில், இந்த வருடம் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. (ஐ)

## துப்பாக்கி வெடித்து ஒருவர் படுகாயம்!

வாழைச்சேனை, செப். 05

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வேட்டை துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அதனைக் கொண்டு சென்றவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு ஓமனியாமடு பிரதேச காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில், வாகரையை சேர்ந்த 32 வயது நபரே காயமடைந்தார்.

வேட்டைக்காக அதனைக் கொண்டு சென்றபோது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததிலேயே அவர் படுகாயமடைந்தார்.

இதில் காயமடைந்த நபர் பொலநறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வலுவான பொருளாதார நாடுகளில் பிரிட்டனை பின்தள்ளியது இந்தியா!

நியூயோர்க், செப். 05

**பிரிட்டனை பின்னுக்குத் தள்ளி அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜேர்மனிக்கு அடுத்து உலகின் ஐந்தாவது மிகப் பெரும் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் தரவுகளின் அடிப்படையில் 'புளூம்பெர்க்' (Bloomberg) ஊடக நிறுவனம் நடத்திய ஆய்வில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

கடந்த மார்ச் வரையிலான கணக்கீட்டின்படி, இந்தியாவின் பொருளாதார மதிப்பு 85,470 கோடி அமெரிக்க டொலராக இருந்தது. இதே காலகட்டத்தில் பிரிட்டனின் பொருளாதார மதிப்பு 81,600 கோடி அமெரிக்க டொலராக இருந்தது.

2021ஆம் ஆண்டின் கடைசி 3 மாதங்களில் இந்தியாவின் பொருளாதாரம் மிகப்பெரியளவில் வளர்ந்ததே இதற்கு முக்கிய காரணம் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.




அமெரிக்க டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவைச் சந்தித்துள்ள போதிலும், ஸ்ரேலிங் பவுண்ஸ் மதிப்புடன் ஒப்பிடுகையில் வலுவடைந்தே உள்ளது.

நடப்பு 2022-23ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதலாவது காலாண்டில் இந்திய பொருளாதாரம் 13.5 சதவீதம் வளர்ச்சி கண்டிருந்தது. நிகழ் நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் சுமார் 7 சதவீதம் வளர்ச்சி காணும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

உலகின் முக்கிய நாடுகளில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார மாக இந்தியா தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.

உலகளவில் மிகப்பெரும் பொருளாதார மதிப்பைக் கொண்ட நாடாக அமெரிக்கா விளங்கி வருகிறது. அதற்கு அடுத்த இடங்களில் சீனா, ஜப்பான், ஜேர்மனி ஆகியவை உள்ளன. 10 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பட்டியலில் இந்தியா 11-ஆவது இடத்தில் இருந்தது. தற்போது ஐந்தாவது இடத் துக்கு முன்னேறியுள்ளது.

அடுத்த சில ஆண்டுகளில் ஆறாவது இடத்தில் உள்ள பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான பொருளாதார மதிப்பு இடைவெளி மிகப் பெரிய அளவில் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் பெரும் 10 பொருளாதார நாடுகளின் முதல் 10 இடங்களில் அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜேர்மனி, இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகள் வரிசையில் பிரான்ஸ், இத்தாலி, பிரேஸில் மற்றும் கனடா இடம்பிடித்துள்ளன. (ஐ)

## சுவாமி விவேகானந்தருக்கு மெக்சிக்கோவில் சிலை!



மெக்சிக்கோ சிற்றி, செப். 05

மெக்சிகோ நாட்டில் சுவாமி விவேகானந்தருக்கு சிலை வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு சபாநாயகர் தலைமையில் சென்றது. சபாநாயகர் ஓம் பிர்லா விவேகானந்தரின் சிலையை திறந்து வைத்தார்.

இலத்தீன் அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தருக்கு அமைக்கப்பட்டுள்ள முதல் சிலை இதுவாகும். இந்த சிலை மக்களுக்கு, குறிப்பாக இப்பகுதி இளைஞர்களுக்கு, நாட்டை புதிய தலைமைக்கு கொண்டு செல்லும் மாற்றத்தை கொண்டு வருவதற்கான உத்வேக மாக இருக்கும் என்று இதன் போது இந்திய சபாநாயகர் தெரிவித்தார். (ஐ)

## பாகிஸ்தான் வெள்ளத்தால் உயிரிழப்பு 1208 ஆக உயர்வு

இஸ்லாமாபாத், செப். 05

பாகிஸ்தானில் வழக்கத்தை விட மிக அதிகமாக பெய்து வரும் பருவ மழைக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 1,208 ஆக உயர்ந்துள்ளது.

இது குறித்து தேசிய பேரிடர் மேலாண்மை அமைப்பு வெளியிட்ட புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதாவது:

கடந்த ஜூன் மாதம் முதல் பெய்து வரும் கனமழை காரணமாக இதுவரை 416 சிறு வர்கள், 244 பெண்கள் உள்பட 1,208 பேர் உயிரிழந்தனர் 6,082 பேர் காயமடைந்துள்ளனர்.

முன்னதாக, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து இதுவரை 50,000 பேரை மீட்கப்பட்டனர் என்று இராணுவம் தெரிவித்தது.

வெள்ளத்தால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தானுக்கு 16 கோடி டொலர் நிவாரண உதவி அளிக்க வேண்டும் என்று உலக நாடுகளை ஐ. நா. கேட்டுள்ளது. (ஐ)

## பிரிட்டனின் பிரதமர் யார்? முடிவு இன்று வெளியாகும்!

லண்டன், செப். 05

பிரிட்டனின் அடுத்த பிரதமர் யார் என்ற அறிவிப்பு இன்று திங்கள் கிழமை வெளியாகவுள்ளது.

கொரோனா தொற்று பரவல் காலத்தில் அரசின் கட்டுப்பாடுகளை மீறி, பிரதமராக இருந்த பொறிஸ் ஜோன் சன், கேளிக்கை விருந்து நடத்தினார் என்று குற்றச்சாட்டு எழுந்தது. அது நாட்டில் பெரும் விமர்சனங்களை ஏற் படுத்திய நிலையில், கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பலைகள் எழுந்தன.

இதயடுத்து அவர் தனது பிரதமர் மற்றும் கட்சித் தலைமைப் பதவியை இராஜினாமா செய்தார்.

இதையடுத்து ஆளும் கன்சர்வே டிவ் கட்சியின் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆளும் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவரே நாட்டின் பிரதமராகவும் பொறுப்பேற்பார். பிரதமர் போட்டிக்குள் பலர் நுழைந்த நிலையில், இறுதிச்சுற்றில் ரிஷி சுனக்குக்கும் வெளியுறவு அமைச்சர் லிசஸ் ட்ரஸூக்கும் இடையே போட்டி ஏற்பட்டது.

சுமார் 1.60 லட்சம் கட்சி உறுப்பினர்கள் வாக்களிப்பதற்கு கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5 மணி வரை அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது. இந்த வாக்களிப்பு முடிவு இன்று திங்கட்கிழமை வெளியாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிரிய விமான நிலையம்மீது இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல்!

டமாஸ்கஸ், செப். 05

சிரியாவின் அலெப்போ நகரில் உள்ள சர்வதேச விமான நிலையம் மீது இஸ்ரேல் கடந்த புதன்கிழமை இரவு ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் உயிரிழப்பு ஏதுமில்லை என்று அந்நாட்டின் சனா செய்தி நிறுவனம் கூறியது.

சிரியா நாட்டில் கடந்த 2011 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் தொடங்கியதில் இருந்தே அதன் அரசுப் படைகள் மற்றும் அதற்கு ஆதரவாக சண்டையிடும் ஈரான் ஆதரவு படைகளுக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையிலேயே இந்தத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

விமான நிலையம் மீதான தாக்குதலை பிரிட்டனை மையமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் உறுதி செய்துள்ளது.

விமான ஓடுதளம் மற்றும் களஞ்சியங்களை குறிவைத்து 4 ஏவுகணைகளை செலுத்தி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக அந்த அமைப்பு கூறியுள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் சிரியா மீது நூற்றுக்கணக்கான தாக்குதலை இஸ்ரேல் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அன்பின் தருணமா? இரையின் இறுதிநொடியா?



படத்தில் இருக்கும் போனோபோ குரங்கு கீரி குட்டி ஒன்றை கைகளில் ஏந்தியுள்ளது. குரங்கின் அரவணைப்பில் இவ்வாறு சுமார் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக இந்தக் குட்டி இருந்துள்ளது.

பொதுவாக போனோபோ குரங்குகள் இரக்கமும் அன்பும் நிறைந்தவை. ஆனால், கீரிக் குட்டியின் தாயை இந்தக் குரங்கு வேட்டையாடியிருக்கலாம். அதன் குட்டியை இரவு உணவுக்காக பிடித்து வைத்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

இந்தப் புகைப்படம் இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தின் இந்த ஆண் டுக்கான சிறந்த காட்டுயிர் படமாக தெரிவாகியுள்ளது.

# ஆப்கானிஸ்தானை பழிதீர்த்தது இலங்கை!




சார்ஜா, செப். 05

சுப்பர் - 4 சுற்றில் ஆப்கானிஸ்தானை 4 விக்கெட்கள் வெற்றி கொண்ட இலங்கை அணி, முதல் சுற்றில் ஏற்பட்ட தோல்விக்குப் பழி தீர்த்தது.

ஆப்கானிஸ்தான் நிர்ணயித்த 176 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை 19.1 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

ஆப்கானிஸ்தானின் இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு, பதும் நிஸங்க, குசல் மெண்டிஸ் ஆகிய இருவரும் அபாரமாக துடுப்பெடுத்தாடி 39 பந்துகளில் 62 ஓட்டங்களைக் குவித்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

முதலாவதாக ஆட்டமிழந்த குசல் மெண்டிஸ் 19 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 36 ஓட்டங்களைப் பெற்றார். மொத்த எண்ணிக்கை 80 ஓட்டங்களாக இருந்தபோது பதும் நிஸங்க 35 ஓட்டங்களுடன் களம் விட்டு வெளியேறினார்.

இந்த சுற்றுப் போட்டியில் 3ஆவது தடவையாக துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறிய சரித் அசலங்க 8 ஓட்டங்களை மாத்திரம் பெற்றார். அணித் தலைவர் தசுன் சானக நீண்ட நேரம் தாக்குப் பிடிக்காமல் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தனுஷ்க குணதிலகவும் பானுக ராஜபக்ஷவும் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 15 பந்துகளில் 32 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு பலம் சேர்த்தனர். தனுஷ்க குணதிலக 20 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 33 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து வெற்றி இலக்குக்கு 2 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் பானுக ராஜபக்ஷ ஆட்டமிழந்தார். 14 பந்துகளை எதிர்கொண்ட அவர் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 31 ஓட்டங்களைப் பெற்றார்.

வனிந்து ஹசரங்க ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களையும் சாமிக கருணாரட்ன ஆட்டமிழக்காமல் 5 ஓட்டங்களையும் பெற்று இலங்கையை வெற்றி அடையச் செய்தனர்.

ஆப்கானிஸ்தான் பந்துவீச்சில் முஜீப் உர் ரஹ்மான், நவீன் உல் ஹக் ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 175 ஓட்டங்களைக் குவித்தது.

முன்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் தங்களாலான அதிகபட்ச பங்களிப்பை வழங்கி அணியின் மொத்த எண்ணிக்கைக்கு பலம் சேர்த்தனர்.

குறிப்பாக ரஹ்மானுல்லா குர்பாஸ் மிகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 45 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகள் அடங்கலாக 84 ஓட்டங்களைப் பெற்றார்.

13 ஓட்டங்களைப் பெற்ற ஹஸ்ரத்துல்லா ஸஸாயுடன் ஆரம்ப விக்கெட்டில் 49 ஓட்டங்களைப் பகிர்ந்த குர்பாஸ் 2ஆவது விக்கெட்டில் இப்ராஹிம் ஸத்ரானுடன் மேலும் 93 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

இப்ராஹிம் ஸத்ரான் 40 ஓட்டங்களைப் பெற்றார். அவர்களைவிட நஜிபுல்லா ஸத்ரான் 17 ஓட்டங்களைப் பெற்றார்.

இலங்கையின் பந்துவீச்சில் டில்ஷான் மதுஷங்க 2 விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)



## ஓய்வை அறித்தார் செரீனா வில்லியம்ஸ்

கொழும்பு, செப். 05

27 ஆண்டுக்கால ரென்னிஸ் வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெறுவதாக கண்ணீருடன் அறிவித்துள்ளார் ஜாம்பவான் செரீனா வில்லியம்ஸ்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் முடிசூடா ராணியாக திகழ்ந்த அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் மொத்தம் 23 கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டங்களை கைப்பற்றியுள்ளார். உலகின் முதல்நிலை வீராங்கனையாகவும் நீண்ட காலம் இருந்த பெருமையும் அவர் வசம் உள்ளது.

இந்நிலையில், நியூயார்க்கில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற அமெரிக்க ஓப்பன் போட்டியின் மூன்றாவது சுற்றில் ஆஸி. வீராங்கனை அஜ்லா டாம்ஜனோவிக்கிடம் தோல்வியடைந்தார் செரீனா.

இதனால், அவரால் அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியாது போனது. எனவே, முன்னர் அறிவித்தவாறே அவர் இந்தப் போட்டியுடன் ரென்னிஸ் போட்டியிலிருந்து ஓய்வை அறிவித்தார். (ஐ)



## சென்னையின் தலைவராக அடுத்த ஆண்டும் டோனியே

சென்னை, செப். 05

ஐ. பி. எல்லின் அடுத் தொடரிலும் மகேந்திர சிங் டோனியே சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவராக இருப்பார் என அந்த அணியின் தலைமை நிர்வாக அதிகாரி காசி விஸ்வநாதன் தெரிவித்தார்.

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மும்பையில் இருந்து 7 பேர், 10 பேர் என அணியில் ஆடுவது கிடையாது. எல்லா மாநிலங்களிலிருந்தும் 2 பேர் இந்திய அணியில் விளையாடுகின்றனர். அடுத்த ஐ. பி. எல். தொடரிலும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் மகேந்திர சிங் டோனி விளையாடுவார். அதேபோல, அணியின் தலைவராகாவும் நீடிப்பார் என்றார்.

## முஸ்பிஹுர் ரஹீம் ஓய்வை அறிவித்தார்

கொழும்பு, செப். 05

பங்களாதேஷ் அணியின் விக்கெட் காப்பாளர் முஸ்பிஹுர் ரஹீம் சர்வதேச இருபது - 20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஆசிய கிண்ண லீக் போட்டியில் பங்களாதேஷ் அணி இலங்கையிடம் தோற்று சுப்பர் 4 சுற்றுக்கு தகுதி பெறாமல் வெளியேறியது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து தற்போது 35 வயதான முஸ்பிஹுர் ரஹீம் தனது ஓய்வை அறிவித்துள்ளார். 102 இருபது -20 போட்டிகளில் விளையாடிய அவர் 1500 ஓட்டங்களை எடுத்துள்ளார். ஸ்டிரைக் ரேட் 115. சராசரி 19.5.

"சர்வதேச இருபது - 20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகிறேன். வாய்ப்பு வரும்போது கழக தொடர்களில் விளையாட நான் தயாராக இருப்பேன். டெஸ்ட் மட்டும் ஒருநாள் போட்டிகளில் மட்டுமே கவனம் செலுத்தப் போவதாக" தனது ருவிட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளார்.






## உலகக் கிண்ணத் தொடர் விலகினார் ரவீந்திர ஜடேஜா!

மும்பை, செப். 05

முழங்கால் அறுவை சிகிச்சை காரணமாக அவுஸ்திரேலியாவில் நடக்கவுள்ள இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் இருந்து ரவீந்திர ஜடேஜா பங்கேற்க மாட்டார் என தகவல் வெளியாகியுள்ளது.

நடக்கும் ஆசிய தொடரில் ஹொங்கொங் அணிக்கு எதிரான போட்டியில் ஜடேஜா காலில் காயமடைந்தார். அவருக்கு முழங்காலில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

இதனால், அவர் அவுஸ்திரேலியாவில் நடக்கவுள்ள இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் ரவீந்திர ஜடேஜா பங்கேற்க மாட்டார் என தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் விளையாடும் அணியே இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கும் தேர்வு செய்யப்படும் என்பதால், ஓரிரு இடங்கள் மட்டுமே மாற்றப்பட வேண்டிய சூழல் வரலாம் என அணித் தலைவர் ரோகித் சர்மா உள்ளிட்டோர் தெரிவித்திருந்தனர். ஆனால், இந்திய அணி போட்டி கணக்குக்கு பதிலாக காயம் பின்னடைவாக மாறியிருக்கிறது. ஜடேஜா விலகும் பட்சத்தில் அவருக்கு நிகரான ஒரு சிறந்த சகலதுறை வீரர் இந்திய அணிக்கு தேவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கறுப்பு பட்டியலில் சீன உர நிறுவனத்தை சேர்க்குமாறு அரசாங்கத்துக்கு பரிந்துரை

கொழும்பு, செப். 05

**சீனாவின் கிங்டாவோ சீவின் பயோரெக் நிறுவனத்தை கறுப்புப் பட்டியலில் சேர்க்குமாறு தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் அரசாங்கத்துக்கு பரிந்துரைத்துள்ளார்.**

**மேலும் சீனநிறுவனத்தின் உரங்களின் மாதிரிகள் கிருமி நீக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அவை தீங்கு விளைவிக்கும் பற்றீரியாவைக் கொண்டிருக்கின்றன என்று தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை அவதானித்துள்ளது.**

இவ்வாறானதொரு சூழ்நிலையின் அடிப்படையில், இறக்குமதிக்குத் தேவையான சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக, விவசாய அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட விசேட பணிக்குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், உரிய உர இறக்குமதிக்கான நாணயக் கடிதங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இதன்படி, சீனாவின் உர வழங்குநரான கிங்டாவோ சீவின் பயோரெக் நிறுவனம், கடந்த 2021 செப்ரெம்பர் 23 அன்று, 20,550 மெற்றிக்தொன் உரத்தை கொழும்பு துறைமுகத்திற்கு அனுப்பியது.

அவை தாவர தனிமைப்படுத்தல் சட்டத்தின்படி நுண்ணுயிரி நீக்கம் செய்யப்படாததால், அதனை இலங்கையில் தரையிறக்க முடியாது போனது. இதனால் பெரும் சர்ச்சை மஏற்பட்டது. பின்னர், உரத்தை இறக்குமதி செய்த இரண்டு அரச நிறுவனங்களான இலங்கை உரக் கம்பனி மற்றும் கொமர்ஷல் உரக் கம்பனி என்பன பணம் வழங்க மறுத்ததோடு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து கொடுப்பனவை நிறுத்துவதற்கான உத்தரவைப் பெற்றன.

சர்ச்சைக்குரிய சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில், சட்டமா அதிபரின் ஆலோ சனையின் பேரில் இணக்கப் பாட்டின் மூலம் தீர்வுகாண அமைச்சரவையின் அங்கீகரிக் காரத்துக்கு அமைய, கப்பலில் உள்ள உரத்தில் 75 வீத இருப்புக்கான கட்டணமாக 6.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார்1,382 மில்லியன் ரூபாய்) செலுத்தப்பட்டது. இதன்படி, தேவையான கலவை மற்றும் தரம் கொண்ட உரங்களை அதே நிபந்தனைகளின்படி மீண்டும் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தொடர்புடைய வழக்கு மீளப் பெறப்பட்டது.

எனினும், இது வரையில், இந்த நாட்டுக்கு எதிர்பார்த்த தரமான உரம் எதுவும் சீனா நிறுவனத்தால் அனுப்பப்படவில்லை. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி, நாணயக் கடிதம் மற்றும் உத்தரவாதப் பிணை என்பவற்றின் செல்லுப்படியாகும் காலம் நீடிக்கப்பட்டு செல்லுபடியாகும் நிலையில் வைத்திருக்க வேண் டும்.

எனினும், அவைமுறையே கடந்த மார்ச் 12 மற்றும் மார்ச் 24ஆகிய திகதிகளில் காலாவதியாகிவிட்டன.

இதனால் தரப்படுத்தப்பட்ட உரங்கள் வழங்கப்படாமையால் குறித்த நிறுவனம் தமக்கு செலுத்தப்பட்ட பணத்தை மீளப்பெறும் திறனை மீண்டும் இழந்துள்ளதாக கணக் காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் உரத்துக்காக செலுத்தும் தொகை முழுவதும் அரசுக்கு நஷ்டமாக மாறியுள்ளது. இதன்படி, அது தொடர்பான பத்திரங்களை காலாவதியாகும் முன் பணமாக்குதல் அல்லது அவற்றின் காலத்தை நீடிக்க நடவடிக்கை எடுக்காமை மற்றும் முன்பண செலுத்தலின் போது எந்தவித பாதுகாப்பும் இன்றி நிதியை விடுவிக்காதமை ஆகியவற்றின் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை, இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பொறுப்பு கூற வேண்டியவர்க ளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து வசூலிக்குமாறு கணக்காய்வாளர் நாயகம் பரிந்துரைந்துள்ளார். (ஐ)

# சந்தர்ப்பவாத அரசியலே நாட்டில் தற்போது உள்ளது!

## எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, செப். 05

நாட்டில் தற்போது சந்தர்ப்பவாத அரசியலே முன்னெடுக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட பலபிட்டி தேர்தல் தொகுதி கூட்டம், நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார். மேலும்,

“இருநூற்றி இருபது இலட்சம் மக்கள் பெரும் துன்பங்களை எதிர்கொண்டு வரும் சந்தர்ப்பத்தில், அரசாங்கம் அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்வதற்கு முண்டியடித்துக் கொண்டு இருக்கின்றது.

எதிர்காலத்திலும் மின்வெட்டு ஏற்படும்போது நாட்டு மக்கள் நடுங்கத் தொடங்குவார்கள். மக்கள் ஏற்கனவே வாழ்க்



கைச் செலவு அதிகரிப்பால் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர்.

நாட்டில் தற்போது சந்தர்ப்பவாத அரசியலே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான சந்தர்ப்பவாத அரசியலில் ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியோ ஒருபோதும் பங்கேற்காது.

போராட்டக்காரர்களால் விரட்டியடிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மீண்டும் நாடு திரும்பியுள்ளார். அது அவ்வாறு நடக்கும்போது, போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள்மீது அரசு வன்முறையை பிரயோகித்து அவர்கள் மீது அடக்குமுறை களை மேற்கொண்டு வருகின் றது.

மத்திய வருமானம் கொண்ட நாடாகவே ஆரம்பத்தில் எமது நாட்டை கூறினார். தற்போது எமது நாடு குறைந்த வருமானம் பெறும் நாடுகளின் பட்டியலிலேயே இணைக்கப்பட்டுள்ளது.

பாணின் விலை 300 ரூபாயாக அதிகரித்துள்ளது. மின் கட்டணம், நீர்க்கட்டணம் என அனைத்து கட்டணங்களும் அதிகரித்துள்ளன. மண்ணெண்ணெயின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது.

400 கிராம் நிறைகொண்ட பாணை 300 ரூபாய் கொடுத்து வாங்கும் நிலைமையே நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது” என்றார். (கே)

# அரசாங்கம் நாளுக்குநாள் மெலிவடைந்து வருகிறது!

## நளின் பண்டார எம்.பி

கொழும்பு, செப். 05

பாராளுமன்றத்தில் ரணல் விக்கிரமசிங்கவுக்கு இருந்த ஆதரவு 134 என்ற எண்ணிக்கையிலிருந்து தற்போது 120ஆகக் குறைவடைந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். மேலும்,

“இடைக்கால வரவு - செலவு திட்டமானது 120 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. புதிய ஜனாதிபதி 134 பேரின் ஆதரவுடன் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டு இரண்டு மாதங்கள் செல்வதற்குள் 134 என்ற எண்ணிக்கை 120 ஆகக் குறைவடைந்துள்ளது. எனவே, தற்போது அரசாங்கம் மிகவும் கவனமாகவே செயல்பட வேண்டும்.

அரசாங்கம் நாளுக்கு நாள் நலிவடைந்து வருகின்றது. ஜனாதிபதி கூறிய சர்வட்கட்சி அரசாங்கம் இதுவரை ஸ்தாபிக்



கப்படவில்லை.

இது சர்வகட்சி அரசாங்கம் அல்ல. சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசாங்கம் என்று நாமல் ராஜபக்ஷவே கூறியுள்ளார்.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பிலான சர்வகட்சி வேலைத்திட்டம் முன்வைக்கப்படாமையே இதற்குக் காரணமாகும். இதேபோன்று மொட்டுக் கட்சியை சேர்ந்தவர்களின் செயற்பாடுகள் காரணமாக சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முன்வந்தவர்களும் இன்று பின்வாங்குகின்றனர்.

மொட்டுக் கட்சியின் அலைக்கழிக்கும் ஆட்சி முறையே தற்போதும் செயல்படுத்தப்படுகின்றது“ - என்றும் கூறினார். (கே)

# பெரமுனவிலிருந்து மேலும் சிலர் டலஸ் அணிக்கு தாவுவார்கள்?

கொழும்பு, செப். 05

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் மேலும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் டலஸ் ஆதரவு அணியில் இணையக் கூடும் என “மொட்டு” கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதற்கான பேச்சுகள் வெற்றியளித்துள்ளன எனவும், விரைவில் தாவல் அரங்கேறும் எனவும் கூறப்படுகின்றது.

பெரமுனவில் இருந்து டலஸ் அழகப் பெரும, பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் உட்பட 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறியுள்ளனர். அவர்கள் தற்போது புதியதோர் அரசியல் இயக்கத்தை உருவாக்கியுள்ளனர்.

இந்நிலையில், டலஸ் தரப்பை இணைத்துக்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தியும், விமல் தரப்பும் முயற்சித்து வருகின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே “மொட்டு” கட்சி உறுப்பினர்கள் சிலர் டலஸ் பக்கம் சாயவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# பெண் படுகொலை!

கொழும்பு, செப். 05

பெண்ணொருவர் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று களுபோவிலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கிசை - படோவிட்ட பிரதேசத்தை சேர்ந்த 52 வயது பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான பெண்ணை களுபோவில வைத்தியசாலையில் சேர்த்த போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தாக்குதலாளியை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (கே)

## ரூ. 100 எகிறியது...

காரணமாக உணவகங்களில் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், முட்டை ரொட்டி, பரோட்டா, மரக்கறி ரொட்டி மற்றும் றோல்ஸ் போன்ற சிற்றுண்டிகளின் விலைகளும் 10 முதல் 20 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (ஐ)

## சர்வதேச...

பலம் தெரிவித்துள்ளார்.

ஊடக நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை எடுக்கும் முயற்சிகள் எவராலும் தடுக்கப்பட போவதில்லை எனவும் அவர் கூறினார். (ஐ)

## புலம்பெயர்...

சாங்கம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள புலம்பெயர் இலங்கையர்களுக்கான அலுவலகம் குறித்து புலம்பெயர் அமைப்புகளுக்கு தெளிவுபடுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், நீதி அமைச்சின் ஆதரவுடன் வெளிவிவகார அமைச்சு உருவாக்கும் புலம்பெயர் இலங்கையர்களுக்கான செயலகம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. புலம்பெயர்ந்த சமூகத்துடனான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களுக்கு சேவையாற்றுவதை நோக்கமாகக் கொண்டு இந்த அலுவலகத்தை அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இந்த அலுவலகத்தை அமைக்கும் பணிகள் கிட்டத்தட்ட பூர்த்தியாகிவிட்டன. இதன் பின்னர் அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களை இந்த அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுமாறு அழைப்பு விடுக்கும்.

இந்த அலுவலகம் காணி விடயங்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு உதவும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் காணப்படும் கரிசனைகள் தொடர்பில் இந்த அலுவலகம் காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்துடன் இணைந்து செயல்படும் - என்றும் தெரிவித்தார். (ஐ)

## ராஜபக்ஷக்களின்...

துக்கு ஒருபோதும் முடிவு கட்ட முடியாது."

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் மீள் வருகை தொடர்பில் அவரிடம் தென்னிலங்கை ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "ராஜபக்ஷக்கள் தோற்கவும் இல்லை, தோற்கடிக்கப்படவும் இல்லை. சுயமாக பதவிகளிலிருந்து விலகிய அவர்கள் விரைவில் மீளெழுச்சி பெறுவார்கள்.

எதிரணியினர் ராஜபக்ஷக்களைக் கண்டபடி வசைபாடுகின்றனர், குறைத்து மதிப்பிடுகின்றனர். ராஜபக்ஷக்களின் அருமையும், திறமையும், எமக்கு ஆணை வழங்கிய மக்களுக்கு நன்றாக புரியும்.

உள்நாட்டு, வெளிநாட்டு சூழ்ச்சிகளால் ராஜபக்ஷக்களின் அரசியலுக்கு முடிவுகட்ட முடியாது. தேர்தல் ஒன்று நடந்தால் அதில் ராஜபக்ஷக்களினதும் "மொட்டு" கட்சியினரினதும் கைகள் மீண்டும் ஓங்கும். அந்தத் தேர்தலில் எதிரணியினர் வழமை போன்று தோல்வியையே தழுவுவார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியதை நான் வரவேற்கின்றேன். தனது மீள் அரசியல் பிரவேசம் தொடர்பில் அவர் சிறந்த முடிவை எடுப்பார்" - என்றார். (ஐ)

## வரவேற்க...

வருவதாவது,

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆயுள்கால உறுப்பினரான அவர், தேர்தல்களில் கட்சிக்காக கடுமையாக உழைத்துள்ளார். எதிர்ப்புகளால் கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறிய, ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்த சம்பவங்களால் அவர் கவலையில் இருந்துள்ளார்.

இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்புகிறார் என்பதை அறிந்த அந்த நபர், அவரை வரவேற்க கட்டுநாயக்கா விமான நிலையப் பகுதிக்கு செல்ல பல நாட்கள் ஆர்வமாக இருந்தார்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்புகிறார் என்பதை அறிந்து அவரை வரவேற்க செல்வதற்காக தனது முச்சக்கர வண்டியை தயார் செய்துள்ளார். அத்துடன், அதிகாலையே நித்திரையிலிருந்து எழுவதற்காக மணிக்கூட்டில் அலாரம் வைத்துள்ளார்.

ஆனால், கோட்டாபாய ராஜபக்ஷவை வரவேற்க செல்வதற்கு அவரின் மனைவி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இந்நிலையில், அவர் தூங்கியதும் அவரின் மனைவி அலாரத்தை நிறுத்தியுள்ளார். இதனால், அவரால் அதிகாலையில் எழ முடியாமல் போனது. பகலில் தாமதமாக எழுந்த அவர் மனைவியுடன் முரண்பட்டுள்ளார்.

அத்துடன், அலாரத்தை நிறுத்திய ஆத்திரத்தில் அவர், அரிசி பாத்திரத்தால் மனைவியை தாக்கியுள்ளார். இதனால், மனைவி சிறுகாயங்களுக்கு இலக்கானார். பின்னர், இவர்களின் மோதலை அயல் வீட்டார் தடுத்ததுடன், அவர்களை சமரசப்படுத்தி வைத்ததாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன. (ஐ-சி)

## ஐ. நா. மனித...

யிலேயே பொறுப்புக்கூறல் தீர்வு எட்டப்படும் என்றும் தெரிவித்தார்.

வரும் 12ஆம் திகதி நடக்கும் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் உரையாற்றுவார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாடு...

கோட்டாபய ராஜபக்ஷபாதுகாப்பு செயலாளராக அவர் பணியாற்றிய வேளை இடம்பெற்ற ஊழல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் அவர் ஜனாதிபதியான பின்னர் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இதேபோன்று, இரு இளம் அரசியல் ஆர்வலர்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் சாட்சியமளிப்பதிலிருந்து அவருக்கு வழங்கப்பட்ட விடுபாட்டுரிமையை சவாலுக்கு அவரை உச்சநீதிமன்றத்தில் முற்படுமாறு அழைப்பாணை அனுப்பப்படும் என பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களை பிரதிநிதித்துவம் செய்யும் நுவான்போபகே தெரிவித்துள்ளார்.

ஜூலையில் அழைப்பாணை அனுப்பப்படவிருந்த வேளை கோட்டாபய நாட்டிலிருந்து தப்பியோடினார் என நுவான்போபகே தெரிவித்துள்ளார்.

இந்த காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் 12 வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் உள்நாட்டு போர் முடிவடைந்த பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் பாதுகாப்பு செயலாளராகவும் அவரின் சகோதரர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும் இருந்த சமயத்தில் இடம்பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, போராளிகள் என சந்தேகிக்கப்படுபவர்கள் பத்திரிகையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரை கடத்தி சென்ற கடத்தல் குழுவை வழிநடத்தினார் என கோட்டாபய ராஜபக்ஷ மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இவ்வாறு கடத்தப்பட்ட பலர் மீண்டும் திரும்பிவரவில்லை.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களை கோட்டாபய மறுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 'மேலவை இலங்கை கூட்டணி' விமல் கூட்டணி அங்குரார்ப்பணம்

கொழும்பு, செப். 05

ஆளும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து விலகிய பங்காளிக் கட்சிகளால் உருவாக்கப்பட்டுள்ள கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று கொழும்பு - மஹரகமவில் நடந்தது.

இந்தக் கூட்டணிக்கு "மேலவை இலங்கை கூட்டணி" என்று பெயரிடப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ தலைமையில் உருவான இந்த கூட்டணியில் பிவிதுரு ஹெல உறுமய, ஜனநாயக இடதுசாரி முன்னணி, லங்கா சமசமாஜ கட்சி உள்ளிட்டவை அங்கம் வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ. எம். எவ்வுடனான ஒப்பந்தத்தை பாராளுமன்றுக்கு சமர்ப்பியுங்கள்!

## ஜனாதிபதியிடம் ஹர்ஷ எம். பி. கோரிக்கை

கொழும்பு, செப். 05

சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ. எம். எவ்.) பணியாளர் மட்ட உடன்படிக்கையை எதிர்வரும் செவ்வாய் கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் பொது நிதிக் குழுவின் தலைவருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளாரென தெரிவிக்கப்பட்டது.

"அன்றைய தினம் ஜனாதிபதி அவ்வாறு செய்யத் தவறினால், பொது நிதிக் குழுவின் தலைவர் என்ற தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆவணத்தை வெளிக்கொணருவேன்" என்று நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் ஹர்ஷ டீ சில்வா தெரிவித்தார்.

மேலும், பணியாளர் நிலை ஒப்பந்தத்தின்படி அரசாங்கம் என்ன செய்ய ஒப்புக்கொண்டது என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

கடன்களை மறுசீரமைப்பதில் கடன் வழங்குபவர்களுடன் அரசாங்கம் உடன்பாடு செய்ய வேண்டும் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். உள்நாட்டுக் கடனை மறுசீரமைத்தால் அனைத்து குடிமக்களும் பாதிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# விசுவமடு எரிபொருள் நிலைய முகாமையாளர் மீது தாக்குதல்!

முல்லைத்தீவு, செப். 05

விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலைய உதவி முகாமையாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. செல்லுபடியற்ற கியூ. ஆர். குறியீட்டை பயன்படுத்தி, எரிபொருள் பெறுவதற்கு முயன்ற நிலையில் முகாமையாளர் எரிபொருள் வழங்க மறுத்துள்ளார்.

இந்த நிலையில், சந்தேக நபர் ஒருவர் எரிபொருள் நிலையத்துக்குள் புகுந்து அவரை தாக்கியுள்ளார்.

இச்சம்பவம் நடைபெறும்போது எரிபொருள் நிலையத்தில் பொலிஸார் காவலில் இருந்தபோதும் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த உதவி முகாமையாளர், தருமபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## தனிசந்திப்பில்...

தமிழ் அரசுக் கட்சியை கட்டுக்கோப்புடனும் தலைமையை மீறி செயல்படாதவாறும் வைத்திருக்க வேண்டும் என்றும் அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அந்தக் கூட்டத்தில் வைத்தே சிறீதரன் எம். பி. கருத்து வெளியிட்டுள்ளார்.

நேற்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் சிலரை கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் சிறீதரன் எம். பியும் சந்தித்துப் பேசினர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் ரெலோ, புளொட் கட்சிகள் தனித்தனியாக சந்திப்புக்களை நடத்துகின்றனர். இதேபோன்று எங்கள் கட்சியின் சுமந்திரனும் தனியான சந்திப்புக்களை நடத்துகின்றார். இந்த சந்திப்புக்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கோ அல்லது தமிழ் அரசுக் கட்சியின் தலைவருக்கோ எதுவும் தெரிவிக்கப்படுவதில்லை. இந்த விடயங்கள் குறித்து நடவடிக்கைகள் அவசியம்.

கட்சித் தலைமை உறுப்பினர்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். தலைமையை மீறி விடயங்கள் நடக்காதவாறு பார்க்க வேண்டும். கிளிநொச்சியில் மூன்று உள்ளூராட்சி சபைகளை இவ்வாறே கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளேன். இதுபோன்று கட்சித் தலைமையும் நடக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ-03)

## தொலைதொடர்பு...

தொலைக்காட்சிக்கான கட்டணம் 25வீதத்தால் உயர்கிறது என்று தொலைத்தொடர்பு வழங்குநர்கள் அறிவித்துள்ளனர்.

குறித்த சேவையை வழங்குவதற்கான செலவுகள் அதிகரித்தமை மற்றும் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி காரணமாகவும் வற் வரி 12 வீதத்திலிருந்து 15 வீதமாக உயர்த்தப்பட்டமையாலுமே இந்தக் கட்டணங்கள் உயர்த்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

புதிய கட்டணங்களை செயல்படுத்த தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. (ஐ)

## சுகாதார...

இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்தார்.

அதேநேரம், தற்போது அதிகரித்துள்ள மருந்துப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இதன்போது வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், வெளிநாட்டு கையிருப்பை அதிகரிப்பதற்கு மருத்துவர்களுக்கு விடுமுறை வழங்கி வெளிநாடுகளில் பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என கோரப்பட்டதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஈழநாடு
Eelanadu

# கோட்டாபய ராஜபக்ஷவை உடன் கைது செய்யுங்கள்!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, செப். 05

**மக்களை உணவுக்காக போராடும் நிலைக்கு தள்ளிய கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக கைது செய்யப்பட வேண்டும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மேற்கொள்ளப்பட்ட தூரநோக்கற்ற தீர்மானங்கள் காரணமாகவே நாடு இன்று வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது.**

இவ்வாறு எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் தூர நோக்கற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் மூலமே நாடு பொருளாதார நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டு இருக்கிறது.

ஆனால், நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய கோட்டாபய ராஜபக்ஷ இன்று நாட்டுக்கு வருகை தந்தவுடன் அரசாங்கத்தின் சலுகைகள் உட்பட விசேட பாதுகாப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும், கோட்டாபய ராஜபக்ஷவால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் காரணமாக மூன்று வேளை உணவு உட்கொண்டவர்கள் இன்று இரண்டு வேளை மாத்திரமே உணவு உட்கொள்கிறார்கள்.

இரசாயன உரத்தை தடை செய்து நாட்டு மக்கள் உணவுக்காக போராடுகிறார்கள். பாடசாலை மாணவர்களின் கல்வி செயல்பாடுகள் பாதிக்கப்பட்டு அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி இருக்கிறது.

மேலும், எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகள், இரசாயன உரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வரிசைகள் உட்பட ஒரு வேளை உணவைக்கூட உண்பதற்கு உணவின்றி மக்கள் உயிரிழப்பதற்கான முழுமையான பொறுப்பை கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பேற்க வேண்டும்.

இதன் காரணமாக உடனடியாக கோட்டாபய ராஜபக்ஷ கைது செய்யப்பட வேண்டும். அவரைக் கைது செய்வதன் மூலம் 22 இலட்சம் மக்களை வீதியோரங்களில் நிறுத்தி நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்தில் தள்ளி நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்தமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உரிய தண்டனையை பெற்றுக் கொடுக்க வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)



# இணக்கப்பாடு எட்டப்பட்டமை மகிழ்ச்சியை அளிக்கின்றது!

## ஐ. எம். எவ். இயக்குநர்

நியூயோர்க், செப். 05

இலங்கையின் பொருளாதார கொள்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் சர்வதேச 2.9 பில்லியன் டொலரைப் பெற்றுக் கொள்வதற்கான ஊழியர் மட்ட இணக்கப்பாட்டை எட்டியுள்ளமை மகிழ்ச்சியளிப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டலீனா ஜோர்ஜியேவா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியக்குழு இலங்கைப் பயணத்தின்போது வெளியிட்ட ஊடக அறிக்கையை மேற்கோள்காட்டியே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை சென்றிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவால் ஆரம்பத்தில் கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையில் ஊழியர்மட்ட அறிக்கை தயாரிக்கப்படும். இது முகாமைத்துவத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு, மேலதிக கலந்துரையாடல்களையும் தீர்மானங்களையும் எடுப்பதற்காக சர்வதேச நாணய நிதிய நிறைவேற்றுச் சபைக்குச் சமாப்பிக்கப்படும்.

பொருளாதார உறுதிப்பாட்டையும் கடன் நிலைபேற்று தன்மையை மீட்டெடுக்கும் வகையிலும் , நிதியியல் உறுதிப்பாட்டைப் பாதுகாத்தல், பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாத்தல், ஊழலால் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளை நிவர்த்திசெய்தல், இலங்கையின் வளர்ச்சி வாய்ப்புக்களை வெளிக்கொணர்வதற்குக் கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களை முன்னெடுத்தல் என்பன ஊழியர் மட்ட இணக்கப்பாட்டின் குறிக்கோள்களாகவுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தால் ஆதரவானது பொருளாதாரத்தை உறுதிப்படுத்தல், இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் பொருளாதார மீட்சிக்கான தளத்தைத் தயார்படுத்தல் மற்றும் நீடித்து நிலைத்திருக்கும் மற்றும் அனைத்தும் உள்ளடங்கிய வளர்ச்சியை ஊக்குவித்தல் என்பவற்றை நோக்காகக்கொண்டுள்ளது. இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் ஆதரவளிக்கும் முகமாக எமது ஈடுபாட்டை தொடர்ந்தும் முன்னெடுக்க ஆவலுடன் இருக்கிறோம்." என்றும் கூறினார். (ஐ)

# புதிய பிரேரணையில் இலங்கையை பொறுப்புகூறச் செய்வது அவசியம்!

## முன்னாள் மனித உரிமைகள் ஆணையர்

கொழும்பு, செப். 05

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படவுள்ள புதிய பிரேரணையானது, பொறுப்புக்கூறலுக்கான விடயங்கள் மறைக்கப்படாமலும் மறக்கப்படாமலும் இருப்பதற்கான உள்ளடக்கங்கள் இடம்பெற வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நல்லிணக்க செயல்பாடுகள் தொடர்பில் பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் புதிய பிரேரணையொன்று கொண்டுவரப்படவுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்து இறுதியாக கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட 46.1 பிரேரணையின் காலம் இம்முறையுடன் நிறைவடையவுள்ளது. இந்நிலையில் புதிய பிரேரணை பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் கொண்டுவரப்படவுள்ளது.

இந்தப் பிரேரணையில், இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையினால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நீடிக்கப்பட வேண்டும். குறிப்பாக, பொறுப்புக்கூறல் செயல்பாடுகள் மறைக்கப்படாமலும் மறக்கப்படாமலும் இருப்பதற்காக முக்கிய விடயங்களை உள்ளீர்க்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

முதலாவதாக, சாட்சியங்களை திரட்டுவதற்கான பொறிமுறை ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பொறிமுறை அடுத்த பிரேரணையிலும் உள்ளடக்கப்படுவதோடு, அதற்கான அங்கத்தவர்கள் முழுமைப்படுத்தப்பட்டு செயற்பாட்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான நிலவரங்கள் பற்றி உயர்ஸ்தானிகரின் கண்காணிப்பு தொடரப்பட்டு பேரவைக்கு அறிக்கையிடப்பட வேண்டும் என்றார்.

# கோட்டாபயவை சந்தித்தார் மகிந்த!

கொழும்பு, செப். 05

நாடு திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அவரின் சகோதரரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ நேரில் சந்தித்தார்.

கோட்டாபயவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு நேற்றுமுன்தினம் சென்று அவரைச் சந்தித்த மகிந்த, அவருடன் இரு மணிநேரம் உரையாடினார்.

இதையடுத்து, பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 50இற்கும் மேற்பட்டோர் கோட்டாபய ராஜபக்ஷவை நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

மக்கள் புரட்சி காரணமாக இலங்கையிலிருந்து வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நள்ளிரவு மீண்டும் நாடு திரும்பினார்.

தாய்லாந்திலிருந்து சிங்கப்பூர் வழியாக பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அவர் நாட்டை வந்தடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சஜித் உட்பட விலகியோர் ஐ. தே. கவில் இணையலாம்!

## ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல

கொழும்பு, செப். 05

"சஜித் பிரேமதாஸ உட்பட கட்சியில் இருந்து வெளியேறியோர் மீண்டும் தாய்வீடு திரும்பலாம். அதற்கு எவ்வித தடையும் இல்லை." - இவ்வாறு ஐ.தே.க.வின் சிரேஷ்ட உறுப்பினரும் ஜனாதிபதியின் பாதுகாப்பு விவகார ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"எமது கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன. பிரிந்து சென்றவர்கள் யாராக இருந்தாலும் தாய்க் கட்சியுடன் இணைந்து கொள்வதில் தடையே இல்லை. ஆனால், நாங்கள் எந்தக் கட்சியில் இருந்தும் உறுப்பினர்களை கவர்ந்து இழுக்க மாட்டோம். விரும்பியோர் வரலாம் என்பதே எமது கொள்கை" - என்றார். (ஐ)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 05

காலி பிட்டிகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தல்கஸ்வல பிரதேசத்தில், நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார் என்று பிட்டிகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தல்கஸ்வல பிரதேசத்தை சேர்ந்த 31 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர், மாலை வேளை நகருக்கு சென்றுவிட்டு வீடு திரும்பும்போது வீட்டுக்கு அருகிலுள்ள பாழடைந்த இடத்தில் மறைந்திருந்த நபர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளார் என்று தெரியவருகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (கே)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.00 மணி : இயற்கை வழி



7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துனையாளர் யாழ் பாவாணன்
7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-தமிழ் ரொக்கர்ஸ்
11.00 மணி : நமக்காக நாம்-மறுஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ஜென்டில்மென் சத்தியா, ஐ திரைப்படக்காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா - வைத்தியர் ரஜீவ்- களப்புற்று நோய்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி - அரசின் சரியான திட்டமிடலின்மையே இன்றைய பொருளாதார சரிவிற்கு காரணம்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்



9.30 மணி: மீம்ஸ் பேட்டை
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு